ஜெகத்தாரணி

# செந்தமிழ் வாசகம்

## மூன்றாம் வகுப்பு

(இரண்டாம் பருவம்)

ஆசிரியர்

**குரும்பை உலகநாதன்**

மற்றும் ஆசிரியர் குழு

அட்டைப் படம் மற்றும் புத்தக வடிவமைப்பு

**V.ஜெகந்நாதன்**

ஜெகத்தாரணி பப்ளிஷிங் ஹவுஸ்

எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ்

48/40, வடக்குச் சித்திரை வீதி, மதுரை – 625001

சென்னை மதுரை கோவை

© உரிமை பதிப்பாளருக்கே செந்தமிழ் வாசகம்
பதிப்பாளர் : ஜெஸ்ஸி பப்ளிகேஷன்ஸ்
ஐந்தாம் பதிப்பு : 2024 (புதிய பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)
பாடநூல் தொகுப்பு : குரும்பை உலகநாதன்

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே !

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே !! வாழ்த்துதுமே !!!

– மனோன்மணியம் பெ.சுந்தரனார்

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

“நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்” என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

“ஒருபோதும் வன்முறையை நாடேன், என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல் - பொருளாதார குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்” என்றும், நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# முகவுரை



"செந்தமிழ் வாசகம்" என்னும் இவ்வரிய நூல் பள்ளிச்சிறார்களின் அழகிய கரங்களில் தவழப்போவதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைய குழந்தைகளின் பன்முக ஆற்றல்களான உணரல், படித்தல், பேசுதல், எழுதுதல், வரைதல், வண்ணமிடுதல், கற்பனைத்திறன் வளர்த்தல், பாடுதல், ஆடுதல் போன்றவற்றை வளர்ப்பதில் இந்நூல் உறுதுணை புரியும் என்று நம்புகிறோம்.

சின்னஞ்சிறு மழலைச் செல்வங்கள் சிந்தை மகிழப் படிக்கும் வகையில் அழகாகவும் அற்புதமாகவும் அமைந்துள்ளது, இந்த "செந்தமிழ் வாசகம்". தமிழை, தமிழ்ச்சொற்களை எளியமுறையில் அறியவும், எழுதவும் ஏற்ற முறையில் எளிமையும் இனிமையும் பொருந்திய வார்த்தைகளைக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. சொற்களின் பொருளை விளக்குவதற்கு ஆங்காங்கே அழகிய படங்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அறநெறியைப் போதிக்கும் வண்ணம் அற்புதமான சிறுசிறு பாடல் தொகுப்பினையும், நீதிக்கதைகளையும் ஆங்காங்கே ஆசிரியர் கையாண்டுள்ளது குழந்தைகளின் படிப்பாற்றலை ஊக்குவிக்கும். கதை, கவிதைகளின் மூலம் சிறந்த வாழ்க்கையின் ஒழுங்குமுறைகளும் நீதிகளும் உணர்த்தப்பட்டுள்ளன. பாடத்துடன் இணைந்த பயிற்சிகள் குழந்தைகளின் புரிதல் திறனைக் கண்டறியும் வண்ணம் அமைந்துள்ளன. அரசு கல்வித்துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (**"CCE METHOD"**) நவீனப்படுத்தப்பட்ட கல்விமுறையைக் கையாண்டுள்ளது, நற்பயனை நல்க வல்லது.

குழந்தைகள் விரும்பிப் படிக்கும் வகையில், நல்ல சந்தத்துடன் கூடிய வெல்லத்தமிழ்ப் பாடல்களும், குழந்தைகளின் படிக்கும் வேட்கையை நன்கு தூண்டும் வண்ணம் அமையப்பெற்றுள்ளன.

இத்தகைய சீரிய எங்கள் முயற்சியினைப் பெற்றோர்களும், ஆசிரியப் பெருமக்களும் அங்கீகரித்து, தமிழ்மொழியினைப் பயிலும் மாணவச் செல்வங்களும் இந்நூலை நல்லதொரு வழிகாட்டியாகப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். இப்புத்தகத்தின் நிறைகுறைகளை எங்களுடன் பகிர்ந்துக் கொள்ளத் தமிழ்கூறும் நல்லுலகோரை அன்புடன் வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்

## ஆசிரியர்க்கு

குழந்தைகளை வாழ்க்கைக்கு தயார்படுத்துவது கல்வியன்று. அதற்கு பதிலாக குழந்தைகளின் வாழ்க்கையையே கல்வியாக மாற்றுவதே உண்மையான கல்வியாகும். குழந்தைகளுக்கு மனனம் செய்யச் சொல்லி கல்வியளிப்பதை விட கல்வியை அவர்களாகவே பெறுவதற்கான மனநிலைக்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதே இக்குழந்தை மையக் கல்வி ஆகும்.



1. குழந்தைகள் எல்லோரிடத்திலும் வெளிப்படையாக பயமின்றி, தயக்கமின்றி தமது மனதில் தோன்றும் கருத்துகளை கோர்வையாக எடுத்துக்கூற மற்றும் வெளிப்படுத்த உதவுவது வாங்க பேசலாம்.



2. வாழ்க்கையையும், கல்வியையும் தனித்தனியாகப் பார்க்காமல் ஒன்றோடு ஒன்று தொடர்புப்படுத்தி ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்க உதவுவது சிந்திக்கலாமா?



3. குழந்தைகளுக்குப் பிடித்த விளையாட்டுகளின் மூலமாகவே தன்னுடைய தாய்மொழித் திறனை மேம்படுத்திக் கொள்ள உதவுவது மொழிவிளையாட்டு.



4. இக்காலக் குழந்தைகளின் புதுப்புது சிந்தனைகளையும், படைப்பாற்றலையும், மகிழ்ச்சியுடன் கூடிய ஆர்வத்தையும் தூண்டி விட உதவுவது கலையும் கைவண்ணமும்.

5. எல்லாச் செயல்களையும் திட்டமிட்டு செய்தால் வெற்றி நிச்சயம் என்பதை அறிந்து கொள்ள உதவுவது செயல்திட்டம்.

செயல்திட்டங்களை மாணவர்கள் மேற்கொள்ளும் போது தமது சொந்த, உண்மையான விருப்பங்களை இனம் கண்டு செயல்படுத்த முனைவார்கள். தகவல்களை தேடி கேட்டுப் பெறும் ஆற்றல் பெருக உதவுவது செயல்திட்டம்.



**அறிந்து கொள்வோமா?**

குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி குற்றமாகும். இதனை வலியுறுத்தும் விதமாக குழந்தைத்தொழிலாளர் ஒழிப்பு நாள் ஆண்டுதோறும் ஜீன் 12 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

6. புத்தக அறிவைத் தாண்டி பாடப்பொருளைப் பற்றிய மேலும் பல புது தகவல்களை அறிந்து கொள்ள உதவுவது **அறிந்து கொள்வோமா?** ஆக்கப்பூர்வமான கற்றல் நிகழ்வுக்கு **அறிந்துகொள்வோமா?** செயல்பாடு உதவுகிறது.

7. கூடி வாழும் ஆற்றல் பெற்று மாணவர்கள் சமூகவசமாகும் திறன் பெறவும், ஒற்றுமையின் அவசியம் பற்றி உணரவும் உதவும் படைப்பே **இணைந்து செய்வோம்.**




ஆசிரியர்களின் தனித்திறனும், மாணவர்களின் படைப்பாற்றலும் இணையும் வேளையில் தான் கல்வியானது முழுமை பெறுகிறது.

மகிழ்ச்சியான வகுப்பறைச் சூழலாலும், இனிமையான கற்றல் கற்பித்தல் முறைகளாலும், ஆசிரியர்களின் அனுபவ ஆற்றலாலும் அறிவார்ந்த சமூகம் அமையட்டும்.





# பொருளடக்கம்




| வ. எண் | பாடத்தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | உண்மையே உயர்வு | 7 |
| 2. | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு | 11 |
| 3. | கல்வி கண் போன்றது | 17 |
| 4. | திருக்குறள் கதைகள் | 23 |
| 5. | வாலு போயி கத்தி வந்தது<br>டும் ... டும் ... டும் ... டும் ... | 36 |
| 6. | எழில் கொஞ்சும் அருவி | 43 |
| 7. | நாயும், ஓநாயும் | 52 |
| 8. | நட்பே உயர்வு | 60 |
| | அகரமுதலி | 71 |




# 1 உண்மையே உயர்வு



## கதைப்பாடல்

உப்பு மூட்டை சுமந்துதான்
கழுதை ஒன்று வந்தது
ஓடை கடக்கும் நேரத்தில்
நீரில் மூட்டை விழுந்தது

உப்பு நீரில் கரைந்தது
எடை குறைந்து போனது
நனைந்த மூட்டை அதனையே
கழுதை முதுகில் ஏற்றியே

உரிமையாளர் கழுதையை
வேகமாக ஓட்டினார்
உப்பு எடை குறைந்ததால்
கழுதை மகிழ்ந்து சென்றது.

நாள்தோறும் உப்பு மூட்டையை
கழுதை மீது ஏற்றினார்
ஓடைக் கரையில் வந்ததும்
அசைத்துக் கீழே தள்ளிடும்

எடையும் குறைந்து போய்விடும்
கழுதை மகிழ்ச்சி கொண்டிடும்
புரிந்துகொண்ட உரிமையாளர்
பாடம்புகட்ட எண்ணினார்

அடுத்த நாளும் வந்தது
பஞ்சு மூட்டை ஒன்றையே
கழுதை மீது ஏற்றினார்
ஓடைக்குள்ளே வந்ததும்

அசைத்துக் கீழே தள்ளியது
எடை குறையும் என்றுதான்
உப்பைப் போல நினைத்தது
நீரில் நனைந்த பஞ்சுகளால்

எடையும் அதிகம் ஆனது
உரிமையாளர் மூட்டையை
கழுதை முதுகில் ஏற்றினார்
கனத்த மூட்டை அழுத்தவே

கழுதை வருந்தி அழுதது
உண்மையான உழைப்பு தான்
வாழ்வில் உயர்வைத் தந்திடும்
ஏய்த்துப் பிழைக்க எண்ணினால்
என்றுமில்லை வெற்றியே!



பாடல் பொருள் :

உரிமையாளர், தம் கழுதையின் மீது உப்பு மூட்டைகளை ஏற்றிக் கொண்டு ஓடை வழியே சென்றார். அப்போது, எதிர்பாராத வகையில், கழுதை ஓடையில் தவறி விழுந்தது. அதனால், அதன் முதுகில் இருந்த உப்பு மூட்டைகள் நனைய, எடை குறைந்தது. உப்பு எடை குறைந்ததால் கழுதை மகிழ்ச்சியடைந்தது. ஓடை நீரில் உப்பு கரைவதை அறிந்த கழுதை மறுநாளும் அவ்வாறே ஓடையில் விழுந்தது. கழுதையின் சூழ்ச்சியைப் புரிந்துகொண்ட உரிமையாளர் கழுதைக்குப் பாடம் புகட்ட எண்ணினார். மற்றொரு நாள் உரிமையாளர், கழுதையின் முதுகில் பஞ்சுமூட்டைகளை ஏற்றிக் கொண்டு ஓடை வழியே சென்றார். அவரை ஏமாற்ற நினைத்த கழுதை, மூட்டைகளை அசைத்து நீரில் தள்ளியது. ஆனால், நீரில் நனைந்ததால் பஞ்சு மூட்டைகளின் எடை கூடின. உரிமையாளரை ஏமாற்ற நினைத்துத் தன்னைத்தானே கழுதை ஏமாற்றிக் கொண்டது. ஆகையால், உண்மையான உழைப்பே உயர்வு தரும். பிறரை ஏமாற்றி நாம் வாழ்தல் கூடாது.

**உரையாடலாம் வாங்க!**



ஐந்து கிலோ இரும்பு, ஐந்து கிலோ பஞ்சு
எது எடை அதிகம்? குழுவில் கலந்துரையாடுக...
கதைப் பாடலில் உள்ள கருத்துக்களை உன்
சொந்த நடையில் கூறுக.

## சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. “நனைந்த” இச்சொல்லின் பொருள் ..........

(அ) தாங்கி (ஆ) ஈரமான (இ) சேர்ந்து (ஈ) விரைந்து

2. “ஓடைக்குள்ளே” - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........

(அ) ஓடை + உள்ளே (ஆ) ஓடைக்கு + உள்ளே
(இ) ஓடை + க்குஉள்ளே (ஈ) ஓ + உள்ளே

3. “மகிழ்ச்சி” - இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் ..........

(அ) மறந்தது (ஆ) பேசியது
(இ) துயரம் (ஈ) துன்பம்

**இப்பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களைத் தெரிவு செய்து எழுதுவோமா ...**

வந்தது - விழுந்தது

------------------ ------------------

**சிறு வட்டத்தில் உள்ள எழுத்தில் முடியும்படி சொல் உருவாக்குக.**




1. --------------------------
2. --------------------------
3. --------------------------
4. --------------------------
5. --------------------------
6. --------------------------

**படக்குறியீடுகளைக் கொண்டு சொற்களைக் கண்டுபிடிக்கலாமா?**




1. ----------கவலை----------
2. --------------------------
3. --------------------------
4. --------------------------
5. --------------------------
6. --------------------------

## நாபிறழ் பயிற்சி

ஒரு குடம் எடுத்து அரைக்குடம் இறைத்துக் குறைகுடம் நிரப்பி நிறைகுடம் ஆக்கினான்

அவனும் அவளும் அவலும் தெள்ளு மாவும் தின்றார்கள்

அத்தையைப் பார்க்க வந்தான் சொத்தைப் பல் முத்தையன்

பலாப்பழம் பழுத்து பள்ளத்தில் விழுந்தது.

## தெரிந்து கொள்வோம்

தெள்ளுமாவு என்பது ஒரு வகைச் சத்து மிகுந்த சிறுதானிய ஒட்டுமாவாகும். இது திருநெல்வேலி மாவட்டத்தில் பெரிதும் பயன்பாட்டில் உள்ளது. அதன் சிறப்பை தெள்ளுதமிழ் வார்த்தை என்னும் சொல்லால் அறியலாம்.

## தமிழோடு விளையாடு



சொற்களைக் கூறுவோம்
கைகளைத் தட்டுவோம்.

| | | | |
|---|---|---|---|
| க | து | ய | ம் |
| இ | ட் | சி | ழ |
| வ | ளு | ப | கு |
| ந | டு | ட | ஞ் |

மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு குழுவிற்கும் எழுத்துகள் எழுதிய வரைபடத்தாளினைக் கொடுக்க வேண்டும். எழுத்துகளைக் கொண்டு சொல் உருவாக்கச் சொல்லுதல் வேண்டும்.

ஒவ்வொரு குழுவினருக்கும் 5 நிமிடங்கள் வழங்கலாம். எழுதிய சொற்களை ஒவ்வொரு குழுவினையும் வாசிக்கச் செய்து பாரபட்சமின்றி இரு குழுவினரையும் பாராட்ட வேண்டும்.

## செயல் திட்டம்

எளிய கதைப்பாடல்களைத் தேடிப் படித்து வந்து வகுப்பில் கூறுக.

# 2 ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு




சரி, இப்போட்டிக்கு நாங்கள் ஒத்துக்கொள்கிறோம்.
எல்லா விலங்குகளும் பாலைவனம் நோக்கிச் சென்றன.


மரங்கள் இல்லாமல் குளிர்ச்சி இல்லையே ஒரே வெப்பமாக இருக்கிறதே!
எனக்கும் எந்தக் கிழங்கும் காயும் கிடைக்க வில்லையே


தீடீரென ஒருநாள் பாலைவனத்தில் வேட்டைக்காரர்கள் வந்து விலங்குகளை வேட்டையாடுகின்றனர்.
ஐயோ! நாங்கள் எப்படி தப்பிப்பது?




**திறன் : பண்புகளை வளர்த்தல்**

**நீதிக் கருத்து : ஒற்றுமையே வலிமை**

## உரையாடலாம் வாங்க!

உன் வகுப்பறையில், வீட்டில் மரத்தினாலான பொருட்கள் என்னென்ன உள்ளன? என்பதை பற்றி பேசு.
மரங்கள் விலங்குகளுக்கு மட்டுமல்ல; நமக்கும் பயன் தருகின்றன. எப்படி? உன் கருத்தை வெளிப்படுத்துக.
மரங்கள் நமக்கு என்னென்ன தருகின்றன? என்பது பற்றி கூறு.

## சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. "விவாதம்" - இச்்சொல்லின் பொருள் ..........
   (அ) சர்ச்சை (ஆ) பேசுதல்
   (இ) சாப்பிடுதல் (ஈ) விளையாடுதல்

2. "வெப்பம் + ஆக" - என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..........
   (அ) வெப்பம்யாக (ஆ) வெப்பம்மாக
   (இ) வேப்பமாக (ஈ) வெப்பமாக

3. "திடீரென" - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........
   (அ) திர் + என (ஆ) திடி + என
   (இ) திடீர் + என (ஈ) திடீ + ரென

4. "மரங்களுடன் இருந்தால் தப்பித்திருக்கலாம்" என்று கூறியது ..........
   (அ) சிங்கம் (ஆ) புலி
   (இ) முயல் (ஈ) மான்

### கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி

1. விவாதம் யார் யாருக்கிடையே நடந்தது?
2. என்ன போட்டி அறிவிக்கப்பட்டது?
3. பாலைவனத்தில் என்ன நடந்தது?
4. கதையின் மூலம் நீ அறிந்து கொண்டதை எழுதுக.

## புதிர்களைப் படித்து, விடையைக் கண்டறிந்து பொருத்துக.



மூன்று எழுத்து விலங்கு; நடு எழுத்து இல்லை எனில்
குழந்தைகள் விரும்புவர்; கடைசி எழுத்து மாதம் - அது எது?



காவி உடை அணியாத வெள்ளைத் தவசி குளக்கரையோரம்
தவம் செய்கிறான் ஒற்றைக் காலில் - அவன் யார்?



கூட்டுச் சேர்ந்து கூட்டைக் கட்டும்;
மாட்டுவோரை மடக்கித் தாக்கும் - அவன் யார்?



பொட்டுப்போல இலை இருக்கும்; பொறிப் போல பூ பூக்கும்;
தின்னக் காய் காய்க்கும்; தின்னாத பழம் பழுக்கும்.
- அது என்ன?

## எந்த மரத்திலிருந்து என்ன பொருள்? பொருத்துவோமா?

   

   

## குழுவில் சேராததை வட்டமிடுக.

1. தவளை, பாம்பு, ஆமை, நண்டு, ஓநாய்
2. தென்னை மரம், பனை மரம், வேப்ப மரம், புளிய மரம், வெண்டைக்காய்
3. கண், காது, காட்சி, கை, கால்
4. மாம்பழம், தேங்காய், பலாப்பழம், பப்பாளி, ஆரஞ்சு
5. குளம், நிலா, சூரியன், விண்மீன், வானம்

## சொல் விளையாட்டு




1. ............................ 2. ............................ 3. ............................

4. ............................ 5. ............................

## படம் பார்ப்போம்! பேசி மகிழ்வோம்!








ஒரு பெட்டியில் நிறைய பறவைகள், விலங்குகள், மரங்கள், வாகனங்கள், காய்கறிகள், பூக்கள், பழங்கள் ஆகியவற்றின் படங்களைப் போட்டு வைக்க வேண்டும். ஆசிரியர் அப்பெட்டியை நன்றாகக் குலுக்கி விட்டு ஒவ்வொரு மாணவனாக அழைத்து படங்களை ஆளுக்கு ஒரு படமாக கண்களை மூடிக்கொண்டு எடுக்கச் செய்ய வேண்டும். தான் எடுத்த படத்தினைப் பற்றி அவர்கள் அறிந்த அனைத்தையும் வகுப்பறையின் முன் கூறச் செய்ய வேண்டும். நிறைய கருத்துகளை கூறும் மாணவர்களை அனைவரும் பாராட்டலாம்.




காடுகளில் இருந்து சிறுத்தை, புலி, மலைப்பாம்பு, போன்ற விலங்குகள் ஊருக்குள் நுழைந்துவிடக் காரணம் என்ன?

இதனை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?

# 3 கல்வி கண் போன்றது

சித்தூர் மாவட்டத்தில் சதுரகிரி என்னும் ஊரில் நாகம்மாள் மற்றும் ராமர் தம்பதியினர் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு முதலில் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. பெற்றோர் அக்குழந்தைக்கு கண்ணதாசன் என்று பெயர் சூட்டி, வளர்த்து வந்தனர். இரண்டாவது பிறந்த ஆண் குழந்தைக்கு கோவிந்தராசு என்னும் பெயரையும், பெண் குழந்தைக்கு வேலம்மாள் என்னும் பெயரையும் சூட்டி மகிழ்ந்தனர். கண்ணதாசன், கோவிந்தராசு, வேலம்மாள் ஆகிய மூவரும் சிறுவர்களாக இருந்தபோதே, அவர்களுடைய தாய், தந்தை ஒரு விபத்தில் இறந்து விட்டனர். தாய்ப்பறவையை இழந்த, சிறகு முளைக்காத குஞ்சுகள் போல பிள்ளைகள் மூவரும் துயருற்றனர். அவர்களுக்கு உண்ண உணவில்லை; உடுத்த உடை இல்லை. அவர்கள் மிகவும் வறுமையில் வாடினர். தம்பி, தங்கையைப் பாதுகாக்கும் பொறுப்பு மூத்த பையனான கண்ணதாசனுக்கு உரியதாயிற்று. சிறுவன் அவன் என்ன செய்வான்? பாவம்.



கண்ணதாசன் வீடு வீடாகச் சென்று பிச்சை எடுத்து தன் உடன் பிறந்தவர்களுக்குக் கொடுத்து தானும் உண்டு ஒருவாறாகக் காலத்தைக் கழித்து வந்தான். கண்ணதாசன் பிச்சை வாங்கச் செல்லும் போது அவனது உள்ளம் உருகும்; உடல் நடுங்கும்; மென்மையான அவன் முகத்தில் துன்பம் தோன்றும். பிச்சை இடாதவரின் கடுஞ்சொல்லும், சுடுமுகமும், அவனது கண்களில் நீர் வழியச் செய்யும். எப்போதும் அவன் ஆழ்ந்த துயரத்துடனேயே காணப்பட்டான்.

இவ்வாறு ஒவ்வொரு நாளும் துன்பப்பட்ட கண்ணதாசனின் பிஞ்சு உள்ளத்தில் ஓர் எண்ணம் தோன்றியது. எப்படியாவது நாம் படித்து விட்டால் இந்த இழிவான தொழிலை விட்டுவிடலாம் என்று நினைத்தான். எப்படியாவது படித்தேயாக வேண்டும் என்று முடிவு செய்தான். அந்த ஊரில் சதாசிவம் என்ற ஆசிரியர் கல்வி போதித்து வந்தார். மிகவும் கற்றறிந்த நல்லவர். கருணை உள்ளம் கொண்டவர். கண்ணதாசன் அவரிடம் சென்றான்.

அவரைப் பணிந்து வணங்கினான். தான் பெற்றோரை சிறுவயதிலேயே இழந்து தம்பி தங்கைகளுடன் அல்லல்படுவதைப் பற்றிக் கூறினான். ஐயா! எனக்குப் படிக்க வேண்டும் என்னும் ஆசை உண்டாகிறது. நான் எடுப்பதோ பிச்சை, உடுப்பதோ கந்தல் ஆடை, நீங்கள் அருள் கூர்ந்து எனக்குக் கல்வி கொடுங்கள். உங்கள் பிள்ளைகளில் என்னையும் ஒருவனாகக் கருதி இந்தப் பேருதவியைச் செய்யுங்கள் என்று வேண்டினான். அதைக் கேட்ட ஆசிரியர்மனம் நெகிழ்ந்தது. தம் கையில் இருந்த பிரம்பைக் கீழே வைத்தார்.



சிறுவனாகிய கண்ணதாசனை நோக்கினார். சிறுவனே! உன் குறிக்கோள் மிகவும் உயர்ந்தது. இங்கு கிடைக்கும் பனையோலைகளே உனக்குப் பெருவாழ்வளிக்கும் பொன்னேடுகள்.

இப்பனையோலைகளில் எழுதித் தருவதைப் படித்து உன் கல்வி கற்பதைத் துவங்கு என்று ஆசீர்வதித்தார். கண்ணதாசனின் முகம் மலர்ந்தது. அன்று முதல் ஆசிரியரிடம் பாடம் கற்கலானான். கண்ணதாசன் தமிழில் ஓரளவு அறிவு பெற்ற பின், ஆங்கிலத்தையும் பயின்றான். இரு மொழிகளிலும் உள்ள இலக்கிய இலக்கணங்களை நன்கு பயின்றான்.பல வகையான நீதிநூல்களையும், சாத்திரங்களையும் கற்றுப் பெரும்புலமை பெற்றான். தொடர்ந்து இரவு பகலாக தன் இருபது வயது வரை கல்வி கற்றான். கல்வியும், ஒழுக்கமும் கண்ணதாசனுக்கு இருகண்களாக இருந்தன.

கண்ணதாசனின் படிப்பறிவைக் கேள்விப்பட்டு பலர் அவனை நாடி வந்தனர். தமக்கு ஏற்படும் ஐயங்களைப் போக்கிக் கொள்ளவும், தான் படிக்கும் நூல்களின் பொருளை அறிந்து கொள்ளவும் பலர் அவனது குடிசைக்கு சென்றனர். உணவு தேடி பிச்சையெடுக்க வீடு வீடாகச் சென்ற கண்ணதாசனைத், தேடி செல்வம் வந்தது. அவனது ஓலைக்குடிசை, உயர்ந்த மாளிகை ஆயிற்று. பேரும் புகழுடன் தன் தம்பி தங்கைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தான்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
கல்வி கண் போன்றது".

## உரையாடலாம் வாங்க!



எழுதப் படிக்கத் தெரியாதவர் வெளியூருக்கு பேருந்தில் செல்லும் போது அவர் அடையும் இன்னல்களை குழுவில் கலந்துரையாடுக.

## சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. "துன்பம்" - இச்சொல்லின் எதிர்ச்சொல் ..........

   (அ) இன்பம் (ஆ) துயரம்
   (இ) வருத்தம் (ஈ) கவலை

2. "உரியதாயிற்று" இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........

   (அ) உரி + ஆயிற்று (ஆ) உரியது + ஆயிற்று
   (இ) உரிய + ஆயிற்று (ஈ) உய + ஆயிற்று

3. "துயர் + உற்றனர்" இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..........

   (அ) துயர்உற்றனர் (ஆ) துயருற்றனர்
   (இ) துயரமுற்றனர் (ஈ) துயறுற்றனர்

4. வாழ்க்கையை நெறிப்படுத்த உதவுவது ..........

   (அ) பணம் (ஆ) கருணை
   (இ) பொய் (ஈ) கல்வி

5. "கருணை" என்பதன் பொருள் ..........

   (அ) இரக்கமின்மை (ஆ) எழுதுதல்
   (இ) சொல்லுதல் (ஈ) பரிவு

## கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி

1. கண்ணதாசனின் உள்ளத்தில் தோன்றிய எண்ணம் என்ன?
2. சதாசிவம் என்ற ஆசிரியரின் குணநலன் என்ன?
3. கண்ணதாசன் வாழ்வில் உயரக் காரணமாக இருந்தது எது?

## அகர முதலியைப் பார்த்து பொருள் எழுதுக.

1. சாத்திரங்கள் ........................................ 3. புலமை ........................................
2. இலக்கணம் ........................................ 4. ஐயம் ........................................

## சரியான சொல்லால் நிரப்புக

1. கண்ணதாசனின் பிஞ்சு உள்ளத்தில் ஒரு ........................................ ( எண்ணம் / என்னம் ) தோன்றியது.
2. பிச்சை வாங்க செல்லும் போது அவனது .................... ( உள்ளம் / உல்லம் ) உருகும்.
3. படித்து விட்டால் .................... ( இழிவான / இளிவான ) தொழிலை விட்டு விடலாம்.
4. கல்வி ........................................ ( கண் / கன் ) போன்றது.

### தெரிந்து கொள்வோம்

குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி குற்றமாகும். இதனை வலியுறுத்தும் விதமாக குழந்தைத்தொழிலாளர் ஒழிப்பு நாள் ஆண்டுதோறும் ஜூன் 12 ஆம் தேதியன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

## எதனை, எங்கே செய்வோம்?

| | |
|---|---|
| கல்வி கற்போம் | பேருந்து நிலையம் |
| பாதுகாப்பு தேடிச் செல்வோம் | மருத்துவமனை |
| சிகிச்சை பெறச் செல்வோம் | காவல் நிலையம் |
| அஞ்சல் தலை வாங்க | பள்ளி |
| பயணம் செய்யச் செல்வோம் | அஞ்சல் நிலையம் |

## சொல் விளையாட்டு

**மரத்திலுள்ள எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்குக.**

1. சுற்றம்
2. ----------------------------------
3. ----------------------------------
4. ----------------------------------
5. ----------------------------------
6. ----------------------------------




## பாடி மகிழ்வோம்!

பளபளப்பு வண்டி
பனங்காய் வண்டி
ஒத்தையடிப் பாதையிலும்
ஓரம் போகும் வண்டி
புழுதி தரா வண்டி
எண்ணெய் இல்லா வண்டி
ஏறிக்கோடா பாண்டி



## உனக்குச் சரியானவற்றை எடுத்துக்கொண்டு உயர்ந்து செல்



| | |
|---|---|
| பொறுமை | புறங்கூறுதல் |
| கடமை | காழ்ப்பு |
| ஒழுக்கம் | சினம் |
| அச்சம் | சோர்வு |
| கனிவு | துணிவு |
| நேர்மை | அறியாமை |

பணிவு

### சிந்திக்கலாமா?



வளர்மதியும் பொன்மணியும் நல்ல தோழிகள். பொன்மணி சொற்களைத் தெளிவாகவும் அழகாகவும் எழுதுவாள். வளர்மதி சொற்களைத் தெளிவில்லாமல் எழுதுவாள்.

இதனைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

# 4 திருக்குறள் கதைகள்

## சரியான தீர்ப்பு



முன்னொரு காலத்தில் நம் தமிழகத்தில் சிபிச்சக்கரவர்த்தி என்ற மன்னர் சோழநாட்டை ஆண்டு வந்தார். ஒரு நாள் அரச சபையில் வீற்றிருந்த போது அழகிய புறா ஒன்று அவர் மடியில் பொத்தென்று விழுந்தது. காயம்பட்டு உயிர் போகும் நிலையில் துடிதுடித்த புறா மன்னரிடம், "மன்னா, எனக்கு அடைக்கலம் தாருங்கள். என்னை இரையாக்கிக் கொள்வதற்காக ஒரு பருந்து வெகுதூரத்திலிருந்து துரத்தி வருகிறது. என்னைக் காயப்படுத்தி விட்டது. அது என்னைக் கொல்லாமல் விடாது" என்றது.

அப்போது, அங்கு வந்த பருந்து அரசரின் மடியில் இருந்த புறாவைக் கொத்தி இழுத்தது. பருந்தே! "என்னிடம் அடைக்கலம் கேட்டு வந்தவரை எதன் பொருட்டும் நான் கொடுக்கமாட்டேன். இதைக் காப்பது என் கடமை" என்று அரசர் தடுத்தார். "இது நியாயமில்லையே" என்று பருந்து கூறியது. புறா எனக்கு உணவு. அதை ஏன் கொடுக்க மறுக்கிறீர்கள்? அரசே! நான் எதை உண்ணுவது? "உனக்கு வேறு உணவு தருகிறேன். என்னைத் தஞ்சமடைந்த புறாவை விட்டுவிடு" என்றார். "அப்படியானால் தங்கள் உடம்பின் ஒரு பகுதியைக் கொடுங்கள் . ஆனால் அது இந்தப் புறாவின் எடைக்குச் சமமாக இருக்க வேண்டும்".

சரி, என்று ஒப்புக்கொண்ட சிபிச்சக்கரவர்த்தி ஒரு பெரிய தராசினை வரவழைத்தார். ஒரு தட்டில் புறாவை வைத்து அதன் எடைக்குச் சமமாக தன் உடம்பிலுள்ள தசையினை அறுத்து மறுதட்டில் வைக்குமாறு தன் சேவகர்களுக்குக் கட்டளையிட்டார். சேவகர்களும் அவ்வாறே செய்தனர். சதையை வெட்டி வைக்க வைக்க புறாவின் தட்டு உயரவேயில்லை.

இறுதியாக சிபிச்சக்கரவர்த்தி, "பருந்தே இப்போது என்னைத் தின்று உன் பசியைப் போக்கிக்கொள்" என்று சொல்லி புறாவின் எதிர்தட்டில் ஏறி அமர தட்டுக்கள் சமநிலைக்கு வந்தன.

அப்பொழுது, பருந்து நீதி தேவதையாக உருமாறி சிபிச்சக்கரவர்த்தியே உன் நீதி தவறாமையைச் சோதிக்கவே யாம் வந்தோம். ஒரு புறாவிற்காக தன் உயிரையே தியாகம் செய்யத் துணிந்த உன் தர்ம சிந்தனையும், நடுவுநிலைமையும் வாழ்க. நீ மறைந்த பின்பும் உன் புகழ் நீடித்திருக்கும் என்று கூறி மறைந்தது.



குறள்

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

நடுவுநிலைமை, குறள் 114.

விளக்கம்

ஒருவர் நடுவுநிலைமை உடையவர், அல்லாதவர் என்பது அவருக்குப் பின் நிலைத்து நிற்கும் புகழாலும் பழியாலும் அறியப்படும்.



அனிதாவும், வனிதாவும் பள்ளித்தோழிகள். இருவரும் மதுரையில் மேல்நிலைப்பள்ளியில் கல்வி பயின்றனர். அனிதாவின் பெற்றோர் பெரும் செல்வந்தர்கள். செல்வந்தர் வீட்டுப்பெண்ணானதால் அனிதா அனைத்து வசதிகளையும் பெற்றிருந்தாள். அனிதாவின் நெருங்கிய தோழி வனிதா. வனிதாவின் பெற்றோர்களோ ஏழை. அவர்கள் கூலி வேலை செய்து வந்தனர். அவர்களுக்கு வருமானம் போதுமானதாக இல்லை. வீட்டில் மின்சாரவசதி கூட இல்லை என்றாலும், வனிதாதான் வகுப்பில் முதல் மாணவி. விளையாட்டுகளிலும், பேச்சுப்போட்டியிலும் சிறந்து விளங்கினாள்.

அனிதாவிற்கு கல்வியின் மேல் பெரிய விருப்பமோ, ஈடுபாடோ கிடையாது. எங்களிடம் இருக்கும் செல்வ வளத்திற்கு நான் கல்வி கற்க வேண்டிய தேவையே இல்லை என்று கூறி படிப்பில் ஆர்வமில்லாமல் பள்ளியில் வீணாகப் பொழுதுபோக்கினாள். பாடங்களைச் சரியாகப் படிக்கவே மாட்டாள். வனிதா எவ்வளவோ எடுத்துக்கூறியும் படிப்பு பற்றி அனிதா கண்டுகொள்வதாகவே தெரியவில்லை. இருவரும் வளர்ந்து பெரியவர்களானார்கள்.

அனிதாவின் தந்தைக்கு எதிர்பாராத விதமாக வியாபாரத்தில் திடீரென்று சரிவு ஏற்பட்டது. அதன் காரணமாகப் பெருஞ்செல்வத்தை இழந்தார். வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டார். ஆனால், வகுப்பில் முதல் மாணவியாக ஆர்வமுடன் கல்வி கற்ற ஏழைப்பெண் வனிதாவோ நன்றாகப் படித்து இந்திய ஆட்சிப்பணிக் கல்வியில் தேர்ச்சி பெற்று, மாவட்ட ஆட்சியாளரானார். அது கண்டு அனிதாவிற்கு ஒரே ஆச்சர்யம். அனிதாவைச் சந்தித்த வனிதாவோ அவள் நிலை கண்டு மிகவும் வருத்தப்பட்டாள். அனிதா தான் மீண்டும் கல்வியைத் தொடர்ந்து கற்கப் போவதாகக் கூறினாள். மகிழ்ச்சியடைந்த வனிதா கல்வி கற்பதற்கு ஏது வயது? எந்தெந்த செயல்களை எவ்வப்போது செய்யவேண்டுமோ அந்தந்த காலங்களில் செய்து முடித்து விடவேண்டும் என்றாள்.

அனிதா தான் பள்ளிப்பருவத்தில் படிக்காமல் விட்டதை எண்ணி மிகவும் வருந்தினாள். இப்போது வருந்தி என்ன பயன்?

குறள்

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்.

காலமறிதல், குறள் 484.

விளக்கம்

செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தை அறிந்து இடத்தோடு பொருந்துமாறு செய்தால் உலகமே வேண்டுமெனக் கருதினாலும் அது கைகூடும்.

## அன்பென்னும் அருங்குணம்




என் பெயர் மகேந்திரன். ஓர் அரசு ஊழியன். அரசாங்க வேலை நிமித்தம் பல ஊர்களுக்கும் செல்வேன். புதூர் ஒரு சிறிய ஊர். அங்கு எனக்குப் பணி. "மங்களவிலாஸ்" என்ற உணவு விடுதியில் மூன்றுவேளையும் சாப்பாடு. விடுதி முதலாளியின் பெயர் நஞ்சுண்டன். கடுகடுவென்று இருப்பார். கடுமையாகப் பேசி, வேலையாட்களை அரட்டி, மிரட்டி ஓய்வின்றி வேலை வாங்குவார்.

அன்று மதிய உணவு வேளை. சமையலறையில் ஒரே அலறல் சத்தம். என்னவென்று எட்டிப் பார்த்தேன். முதலாளி நஞ்சுண்டன் துப்புரவு வேலை செய்பவனை கொடூரமாக அடித்துக்கொண்டும், கடுமையான சொற்களால் திட்டிக் கொண்டும் இருந்தார். அந்தச் சிறுவன் கை தவறி உடைத்து விட்ட சிறு தட்டு ஒன்றுக்காக அத்தகைய தண்டனை. விசாரித்ததில் அவன் ஒரு அனாதைச் சிறுவன் என்றும், இந்தக் கொடூரனிடம் மாட்டிக்கொண்டு துன்பப்படுகிறான் என்றும் அறிந்தேன். அந்த அனாதைச் சிறுவனின் ஓலமும், முதலாளியின் இரக்கமற்ற செயலும் கண்டு துடிதுடித்துப் போனேன். பணி முடிந்து, எனது ஊருக்குச் சென்றேன்.

வருடங்கள் பல ஓடின. என்றாலும் "மங்களவிலாஸ்" சம்பவம் என் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது. இருபது ஆண்டுகள் கழித்து மீண்டும் புதூர் செல்ல வேண்டியிருந்தது. சென்றேன். ஆனால், புதூர் முற்றிலும் மாறியிருந்தது. "மங்களவிலாஸ்உணவகம்" காணப்பட வில்லை. அதன் முரட்டு முதலாளியைப் பற்றியும், அனாதைச்சிறுவன் என்னவானான்? என்பது பற்றியும் தெரிந்து கொள்ள ஆவலாக இருந்தது. என் முன்னாள் அலுவலகப்பணியாளர் சிரஞ்சீவியிடம் அது பற்றிக் கேட்டேன்.

விடுதி முதலாளி நஞ்சுண்டனின் கொடுமை தாங்காது அனாதைச் சிறுவன் எங்கேயோ ஓடி விட்டான். சிறிதளவும் அன்பில்லாது முரட்டுத்தனமாக வேலை வாங்கும் நஞ்சுண்டனிடம் வேலை செய்ய அதன் பிறகு யாரும் வரவில்லை. புதியதாக ஓர் உணவகம் ஆரம்பித்ததால் நட்டம் அதிகமாகி "மங்களவிலாஸ்உணவகத்தை" மூடிவிட்டனர். நாளடைவில் மங்களவிலாசை விற்று விட்டார். கையிலிருந்த பணம் செலவானது. பின் கூலிவேலை செய்தார்.

தற்போது வயதாகிவிட்டதால், வேலைசெய்ய உடம்பில் தெம்பு இல்லாததால், கோயில் வாசலில் பிச்சை எடுத்துப் பிழைக்கிறார்.

"அடப்பாவமே!" முரடனாக, அதிகாரம் செய்தவனாக, நான் பார்த்த நஞ்சுண்டனை, "ஐயா சாமி" என்று கெஞ்சும் பிச்சைக்காரனாகப் பார்க்க விருப்பமில்லாமல், பேருந்திலேறி என் ஊர் வந்து சேர்ந்தேன்.

குறள்

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்

அன்புடைமை, குறள் 77

விளக்கம்

எலும்பு இல்லாத புழு போன்ற உயிரினங்களை வெய்யில் வாட்டுவது போல, அன்பு இல்லாதவர்களை அறம் வாட்டும்.

## கல்வியே அழியாத செல்வம்



மாயவரம் என்ற ஊரில் மாதவன் என்ற சிறு விவசாயி வசித்து வந்தார். அவருக்கு சொந்தமாக இரண்டு ஏக்கர் நிலம் இருந்தது. அவருக்கு வைரவன், தங்கம் என்று இரண்டு மகன்கள் இருந்தனர். இருவரும் பள்ளிப்படிப்பை முடித்தனர். விவசாய வருமானம் போதுமானதாக இல்லாததால் மாதவனால், "மகன்களின் கல்லூரிப்படிப்பிற்குச் செலவு செய்ய முடியவில்லை". தன் மகன்களிடம் நிலைமையை விளக்கி, "இருவரும் படிப்பை இத்துடன் முடித்துக்கொண்டு என்னைப்போல் விவசாயத்தில் ஈடுபடுங்கள்" என்று சொன்னார். கல்வியில் அதிக ஈடுபாடு கொண்ட வைரவன், அப்பா! நான் கல்லூரியில் படித்து ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொள்ள விரும்புகிறேன் என்றான். தம்பி தங்கமோ! எனக்கு படிப்பிலும் ஆர்வமில்லை, விவசாயத்திலும் நாட்டமில்லை. ஏதாவது தொழில் செய்து பெரும்பணம் சம்பாதிக்க ஆசைப்படுகிறேன் என்றான். மாதவன் மகன்கள் விரும்பியபடியே இரண்டு ஏக்கர் நிலத்தையும் விற்று, தனது வாழ்க்கைக்கு சிறிதளவு பணத்தை எடுத்துக்கொண்டு மீதியை இருவருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தார். அந்த பணத்தைக் கொண்டு வைரவன் பொறியியல் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்று அரசு வேலையிலமர்ந்தான். கை நிறைய சம்பாதித்தான். அவனுக்கு நிரந்தர வருமானமும், ஊக்கத்தொகையும் கிடைத்தது. தம்பி தங்கமோ! மொத்தப் பணத்தையும் வியாபாரத்தில் முதலீடு செய்தான்.



வியாபாரத்தில் முன்அனுபவம் இல்லாததாலும், சரியான வழிகாட்டுதல் இல்லாததாலும் முதலீடுசெய்த தொகை மொத்தமும் நட்டமானது. தன் பங்குப்பணம் முழுவதையும் இழந்ததால் தங்கம் மனமுடைந்து செய்வதறியாது திகைத்து நின்றான். தம்பியின் "பரிதாபநிலை கண்டு வைரவன், தம்பி! கல்வி ஒன்றே, அழிவற்ற செல்வம். கற்கக்கற்க பெருகிக்கொண்டே செல்லக்கூடியது. காலத்தால் அழியாதது. யாராலும் கவர்ந்து செல்ல முடியாதது. ஆனால், பணம் அவ்வாறு அல்ல. பணம் நிலையற்றது" என்று கல்வியின் பெருமையை உணர்த்தினான்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

கல்வி, குறள் 400

### விளக்கம்

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வியைத் தவிர மற்ற எந்த செல்வமும் நீடித்து இருக்காது. கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை.



அழகான ஆற்றங்கரையின் ஓரத்தில் பிரம்மாண்டமாய் ஓங்கி உயர்ந்து ஓர் அரசமரம் வளர்ந்திருந்தது. தான் மிகவும் பலமாகவும், உயரமாகவும் இருப்பதில் அரசமரம் மிகவும் பெருமைப்பட்டது. கர்வம் கொண்டது. அதன் அருகில் நாணற்புல்லும் நிறைய வளர்ந்திருந்தது. நாணற்புல்லானது பலமாகக் காற்றடிக்கும் போதெல்லாம் தரையளவு வளைந்து கொடுக்கும்.

ஆனால் அரசமரமோ, பலம் வாய்ந்த தன்னை காற்றால் ஒன்றும் செய்ய இயலாது என்ற செருக்கோடு நிமிர்ந்து நிற்கும். காற்றுக்கு வளையும் போதெல்லாம் நாணலைப் பார்த்து அரசமரம் கேலி செய்து சிரித்தது. ஒரு நாள் திடீரென்று புயல் அடித்தது. காற்று சுழன்று சுழன்று வீசியது. செருக்கோடு நின்ற அரசமரம் காற்றின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் வேரோடு சாய்ந்து மண்ணில் வீழ்ந்தது. நாணல் புல்லோ எப்போதும் போல் வளைந்து கொடுத்து நிமிர்ந்து நின்றது.

"புயல் காற்றின் வேகத்தால் வலிமை மிக்க நான் விழுந்து கிடக்கிறேன். ஆனால், மெல்லிய நாணற்புல்லாகிய நீயோ சிறிதும் சேதமின்றி இருப்பது எப்படி?" என்று அரசமரம் கேட்டது. "அரசமரமே! நீ புயலோடு அகந்தையுடன் எதிர்த்து நின்றாய். ஆனால் நான் பணிவோடு வளைந்து கொடுத்தேன்.அதனால் தான் நான் உயிரோடு இருக்கிறேன். நீ வேரோடு சாய்ந்து துன்பம் அடைந்தாய்" என்றது.

இதே போன்று தான் மனித வாழ்விலும் "செருக்கு சீரழிக்கும். பணிவு மட்டுமே பயன் தரும்". "பணிவு மட்டுமே ஒரு மனிதனுக்கு அழகே தவிர மற்றவை அழகு ஆகாது".

குறள்

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.

இனியவை கூறல், குறள் 95

விளக்கம் :

அடக்கமான பண்பும், இனிமையாகப் பேசும் இயல்பும் தவிர ஒருவருக்குச் சிறந்த அணிகலன் வேறு இருக்க முடியாது.



## ஆசிரியர் குறிப்பு

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் இயற்றிய இந்நூல், எக்காலத்துக்கும் ஏற்ற அறிவுரைக் கருத்துகளைக் கொண்டுள்ளது. இந்நூலில் அறம், பொருள், இன்பம் என மூன்று பிரிவுகள் உள்ளன. 133 அதிகாரங்களும் அதிகாரத்திற்குப் பத்து குறளென 1330 குறட்பாக்களும் உள்ளன. ஒவ்வொரு குறட்பாவும் ஈரடியால் ஆன வெண்பாவாகும்.

### உரையாடலாம் வாங்க!



உனக்குத் தெரிந்த திருக்குறள் கதையை உமது சொந்த நடையில் கூறுக.

## சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. "ஞாலம்" - இச்சொல் உணர்த்தும் பொருள்________________

(அ) உலகம் (ஆ) மலை

(இ) மழை (ஈ) சூரியன்

2. "மாடல்ல" - இச்சொல் உணர்த்தும் பொருள்________________

(அ) விலங்குஅல்ல (ஆ) வீடுஅல்ல

(இ) உடைமையல்ல (ஈ) சரியல்ல

3. "அணி" - இச்சொல்லின் பொருள்________________

(அ) சிரிப்பு (ஆ) அழகு

(இ) போடு (ஈ) அணிகலன்

4. "என்பிலதனை" - இச்சொல்லைப் பிரித்து எழுதினால் கிடைப்பது..................

(அ) என்பி + லதனை (ஆ) என்பில் + அதனை

(இ) என்பு + லதனை (ஈ) என்பில + தனை

5. "பணிவுடையன்" - இச்சொல்லைப் பிரித்து எழுதினால் கிடைப்பது..................

(அ) பணிவு + டையன் (ஆ) பணிவு + உடையன்

(இ) பணி + வுடையன் (ஈ) பணிவுடை + யன்

6. "என்பு" - இதன் பொருள் என்ன ? ________________________________

(அ) கை (ஆ) கால் (இ) எலும்பு (ஈ) மூக்கு

**சரியான விடையைக் கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்புக.**
**( கல்வி, புழு, அன்பு, இனிமையான சொல், புகழ், பழி )**

1. ஒருவரின் நடுவுநிலைமை .............................. .............................. ஆகியவற்றால் அறியப்படும்.
2. எலும்பு இல்லாத உயிரினம் என்று கூறப்படுவது ..............................
3. .............................. இல்லாதவர்களை அறம் வாட்டும்.
4. இன்சொல் என்பதன் பொருள் ________________________________
5. அழிவு இல்லாத சிறந்த செல்வம் ________________________________

**கொடுக்கப்பட்டுள்ள குறட்பாக்களில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.**

.............................. ..............................

.............................. ..............................

.............................. ..............................

**விடுபட்ட சீர்களை நிரப்புக.**

1. தக்கார்.............................. என்பது ..............................
.............................. காணப்படும்.
2. பணிவுடையன் .............................. ஆதல் ஒருவற்கு
..............................அல்ல மற்றுப்பிற.
3. .............................. விழுச்செல்வம்.............................. ஒருவற்கு
.............................. மற்றை யவை.

## பாடி மகிழ்வோம்!

தோட்டமாம் தோட்டம் பப்பாளித் தோட்டம்
படுத்த பாயைச் சுருட்டிக்கொண்டு எடுத்தானாம் ஓட்டம்

சரக்கு ரயிலை குறுக்கு வழியில்
நிறுத்த வந்த முறுக்கு மீசை மைனர் சறுக்கி விழுந்தாராம்.

உளி பெருகும் சிலை அழகு
அலை உலவும் கடல் அழகு

## குழு விளையாட்டு விளையாடுவோமா?

ஞாலம், அறம், அணி, என்பு, கேடில், எலும்பு, உலகம், அணிகலன், அழிவில்லாத, தருமம்

திருக்குறளில் உள்ள மேற்கண்ட புதிய சொற்களை அட்டைகளில் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கான பொருள் அடங்கிய அட்டைகளை வேறு நிற அட்டைகளாகத் தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும். மாணவன் ஒருவனை அழைத்து, பெட்டியில் ( புதிய சொற்கள் அடங்கிய அட்டைப்பெட்டி ) உள்ள ஏதேனும் ஒரு சொல்லை எடுக்கச் செய்ய வேண்டும்; அந்தச் செயலை அதற்கான பொருள் அடங்கிய அட்டையை சரியாக எடுத்து பொருத்தி வாசிக்க வேண்டும். இதே போல் எல்லா மாணவர்களுக்கும் வாய்ப்புத் தர வேண்டும். இதே போல் தொடர்ந்து விளையாடி கற்கலாம்.

## செயல் திட்டம்

திருக்குறள் ஓலைச்சுவடி உருவாக்கி,
அதில் பத்துக் குறட்பாக்களை எழுதி வருக.

# 5 வாலு போயி கத்தி வந்தது! டும்...டும்...டும்...டும்





ரொம்ப சிரமப்படுகிறாய். இந்தா கத்தி, இதனால் வெட்டு
அட! கத்தி உடைந்துவிட்டதே !
விறகு வெட்டியே... என் கத்தியை தருகிறாயா? இல்லை விறகைத் தருகிறாயா?
இந்தா...விறகை நீயே வைத்துக்கொள்
பாட்டி! இந்த விறகை வைத்துக்கொள். தோசையைச் சுடு!
ஐயோ... விறகை எல்லாம் எரித்து விட்டாயே?


இங்க பாரு பாட்டி, என் விறகைத் தருகிறாயா? இல்லை தோசையைத் தருகிறாயா?
சரி! சரி! இந்தா தோசையை எடுத்துக்கொள்
பால் விற்கும் பெண்ணே பசியா? இந்தா, தோசையைச் சாப்பிடு.
ஓ...தோசை முழுவதையும் சாப்பிட்டு விட்டாயா?
பெண்ணே என் தோசையைத் தருகிறாயா? இல்லை, பானையைத் தருகிறாயா?
இந்தா சாமி... என் பானை நீயே வைத்துக்கொள்.


தோட்டக்காரரே தண்ணீர் எடுத்து ஊற்றுவதற்கு, இந்தப் பானையை வைத்துக்கொள்...
ஐயோ! என் பானை உடைந்து போயிற்றே!
என் பானையைத் தருகிறாயா? இல்லை, பூவைத் தருகிறாயா?
இந்தா...பூக்களைத் தருகிறேன், எடுத்துக்கொள்
இந்தா... பெண்ணே! பூக்களைத் வைத்துக்கொள், அழகாக இருக்கும்.
அடடே! என் பூக்கள் உதிர்ந்து போயிற்றே







ஓணான் அந்த மேளத்தை அடித்தவாறே மகிழ்ச்சியோடு பாடியது




**நீதிக் கருத்து:**

**துன்பம் வரும் வேளையில் மனம் சோர்வு அடையக்கூடாது.**

**உரையாடலாம் வாங்க!**

- ‘டும்.. டும்.. டும்.. டும்..’ படக்கதையை உமது சொந்த நடையில் கூறுக.
- வாரஇதழ்களில் வரும் படக்கதையைப் படித்த அனுபவம் உண்டா? ஆம் எனில் அக்கதையைப் பற்றி கூறுக.

## சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. "மாட்டிக்கொண்டது" - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................

(அ) மாட்டிக் + கொண்டது (ஆ) மாட்டி + கொண்டது
(இ) மாட்டு + கொண்டது (ஈ) மாட்டிக் + கொண்டது

2. "சிரமம் + படு" - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ........................

(அ) சிரமம்படு (ஆ) சிரமப்படு
(இ) சிரமபடு (ஈ) சிரமபாடு

3.  - இப்படத்திற்கு உரிய சொல்லைக் கண்டறிக.

(அ) பானை (ஆ) பாநை
(இ) பாணை (ஈ) பனை

4. "தோசை" இச்சொல்லின் ஒலிப்புடன் தொடர்பில்லாத சொல் எது?................

(அ) ஆசை (ஆ) மேடை
(இ) பூசை (ஈ) இசை

## கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி

1. ஓணான் எதற்காக மருத்துவரிடம் சென்றது?
2. தோட்டக்காரன் ஓணானிடம் என்ன கூறினான்?
3. கதையில் ஓணான் பெற்று வந்த பொருள்களைக் கூறுக.
4. படக்கதையிலிருந்து நீ அறிந்து கொண்ட கருத்து யாது?
5. பாட்டியிடம் ஓணான் கேட்டது என்ன?
6. பால் விற்கும் பெண் தோசைக்குப் பதிலாகக் கொடுத்தது என்ன?
7. தோட்டக்காரனிடம் ஓணான் பானையை எதற்காகக் கொடுத்தது?

புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக.

அடிக்காமல் திட்டாமல் கண்ணீரை
வரவழைப்பாள் - அவள் யார்?



குடிக்காத குடத்துக்குள்ளே தண்ணீர்
கிடக்குது - அது என்ன?



யானை விரும்பும் சேனைவிரும்பும்
அடித்தால் வலிக்கும் கடித்தால்
இனிக்கும். - அது என்ன?



## சொல் விளையாட்டு

ஒரு சொல்லில் உள்ள ஏதாவது ஓர் எழுத்தைக் கொண்டு,
புதிய சொற்களை உருவாக்கி மகிழ்க.

அ ழ கு
கு ங் கு ம ம்
ம த கு
த ட ங் க ல்

இதே போன்று காகம், எலி, மரம், தந்தம் போன்ற சொற்களைத்
தொடக்கமாக வைத்துச் சொற்களை உருவாக்குக.

### தெரிந்து கொள்வோம்

உலக கதைசொல்லல் நாள் - மார்ச் 20

# 6 எழில் கொஞ்சும் அருவி



( வாணி, ராணி ஆகிய இருவரும் அத்தை மாமா வீட்டிற்குச் செல்கிறார்கள். )

அத்தை : வாங்க! வாங்க கண்ணுங்களா! வீட்டில் அப்பா, அம்மா, எல்லோரும் நலமா?

வாணி : எல்லோரும் நலம் தான் அத்தை. நீங்கள் நலமா? எங்கே மாமாவையும் நிரஞ்சனையும் காணவில்லை?

மாமா : இதோ வந்து விட்டோம் வாணி. நீங்கள் இருவரும் கல்விச் சுற்றுலா சென்றதாகக் கேள்விப்பட்டோம். எங்கெல்லாம் சென்றீர்கள்?

நிரஞ்சன் : சொல்லுங்கள். என்னவெல்லாம் கண்டுகளித்தீர்கள்? எனக்கும் அது பற்றி அறிய ஆவலாய் உள்ளது.

வாணி : நாங்கள் பள்ளிச்சுற்றுலாவாக ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி போயிருந்தோம். அது தருமபுரி மாவட்டத்தில் உள்ள பொன்னகரம் ஊராட்சி ஒன்றியத்தில் இருந்து 16 கி.மீ. தூரத்தில் உள்ளது.

கடல் மட்டத்திலிருந்து சுமார் 1500அடி உயரத்தில் எழில் கொஞ்சும் மலையில் உள்ளது. மலை உச்சியிலிருந்து வெள்ளியை உருக்கி ஊற்றியது போல் பேரிரைச்சலுடன் விழும் அருவி பார்க்கப் பேரழகு.

ராணி : ஆமாம் நிரஞ்சன். அதன் அழகே அழகு.

மாமா : அது ஏன் ஒகேனக்கல் என்றழைக்கப்படுகிறது?

வாணி : ஒகேனக்கல் என்பதற்குப் “புகைப்பாறை” என்பது பொருள். கன்னடத்தில் “ஒகே” என்றால் “புகை” என்று பொருள். அருவிநீர் கல்பாறையில் பட்டுத் தெறித்து, வெண்புகை போலத் தோற்றம் அளிப்பதால் தான் இப்பெயர் வந்தது. ஒகேனக்கலின் பழைய பெயர் “உகுநீர்க்கல்” என்பதாகும். அதுவே காலப்போக்கில் “ஒகேனக்கல்” எனத் திரிந்து விட்டது.

ராணி : உல்லாசப் பயணிகளை ஆரவாரத்தோடு வரவேற்கும் இந்நீர்வீழ்ச்சி கண்கவர்காட்சியாகும். இந்தப் பிரம்மாண்ட நீர்வீழ்ச்சி “இந்தியாவின் நயாகரா” என்றும் அழைக்கப்படுகிறது.

அத்தை : நீர்வீழ்ச்சியை எவ்வளவு தூரத்தில் சென்று பார்த்தீர்கள்? அங்கு எவ்வாறு சென்றீர்கள்?

வாணி : அத்தை அங்கு நிறைய பரிசல்கள் உள்ளன. பரிசல் மூலம் சுற்றுலாப் பயணிகளை அருவிகளுக்கு அருகே அழைத்துச் செல்வார்கள். எண்ணெய்க் குளியல் இங்கு பிரபலம். நூறு அடி உயரத்திலிருந்து விழும் அருவியில் குளித்தது ஆனந்தமாக இருந்தது.

நிரஞ்சன் : பரிசலில் பயணம் செய்தது எப்படி இருந்தது? வழியில் என்னென்ன பார்த்தீர்கள்?

ராணி : நீர்வீழ்ச்சிப்பகுதிக்கு அருகிலேயே பிடிக்கப்படும் மீன்கள், பிடித்த உடனேயே, அங்கேயே பொரித்துத் தரப்படுவது குதூகலத்தைத் தந்தது. அச்சுறுத்தும் மலைப்பாறை அமைப்புகளும், நீரின் மூர்க்கத்தனமான பாய்ச்சலும் காண்பதற்கு கண் கொள்ளாக் காட்சியாகும்.

வாணி : ஆர்ப்பரிக்கும் அருவியைப் பார்த்த வண்ணம் பரிசலில் பயணம் சென்றது எங்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியது. இரு மலைகளுக்கு இடையே

தொங்கு பாலத்தில் சென்றோம். அங்கு "ஞானதீர்த்தம்" என்று அழைக்கப்படும் இடத்தில் சௌகரியமாக நீராடலாம்.

ராணி : நாங்கள் அனைவரும் நீராடி விட்டு, மீண்டும் கரையை அடைந்தோம். உணவு உண்ட பின் மான்பூங்கா சென்றோம். துள்ளித் திரியும் மான்கூட்டம், முதலைப் பண்ணை முதலியவற்றைக் கண்டு களித்தோம்.

வாணி : அத்தை, இங்கே "தேசநாதீஸ்வரர் கோவில்" உள்ளது. இது மிகவும் பழமையானது. தகடூர் என்னும் தருமபுரியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட "அதியமான் நெடுமான் அஞ்சி" என்ற சங்ககால அரசர் காலத்தைச் சேர்ந்தது. இச்செய்தியை அங்கிருந்த கல்வெட்டைப் படித்து அறிந்து கொண்டோம்.

நிரஞ்சன் : மிகவும் மகிழ்ச்சி. நீர்வீழ்ச்சியின் அழகையும், அது உற்பத்தியாகும் மலைகளின் எழிலையும் கண்டு களித்தது மட்டுமின்றி, அது பற்றியும் உங்கள் அனுபவத்தையும் மிகத் தெளிவாகச் சொன்னீர்கள்.

மாமா : நன்றி குழந்தைகளே! எங்களுக்கும் ஒகேனக்கல்லை நேரில் பார்த்த பரவசத்தை உண்டாக்கிவீட்டீர்கள்! குடும்பத்துடன் நாம் எல்லோரும் ஒரு முறை சென்று வருவோம்.





## உரையாடலாம் வாங்க!



ஏதேனும் சுற்றுலாத்தலம் சென்று வந்துள்ளாயா? உனது அனுபவத்தை வகுப்பில் பகிர்ந்து கொள்.

## சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. ஒகேனக்கல் அருவியில் நீர் வீழ்வது ................................ உருக்கி ஊற்றுவது போல் இருந்தது.

(அ) தங்கத்தை (ஆ) வெள்ளியை

(இ) இரும்பை (ஈ) கற்பாறையை

2. "**ஒகேனக்கல்**" என்ற சொல்லின் பொருள் ................................

(அ) பவளப்பாறை (ஆ) வழுக்குப்பாறை

(இ) பனிப்பாறை (ஈ) புகைப்பாறை

3. "**வெண்புகை**" என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................................

(அ) வெண் + புகை (ஆ) வெ + புகை

(இ) வெண்மை + புகை (ஈ) வெம்மை + புகை

4. "**பாதை + அமைத்து**" - இச்சொற்களை சேர்த்து எழுதக் கிடைப்பது ................

(அ) பாதைஅமைத்து (ஆ) பாதையமைத்து

(இ) பாதம்அமைத்து (ஈ) பாதயமைத்து

5. "**தோற்றம்**" - இச்சொல்லின் எதிர்ச்சொல் ................................

(அ) தொடக்கம் (ஆ) மறைவு

(இ) முதல் (ஈ) ஆரம்பம்

## வினாக்களுக்கு விடையளி.

1. ஒகேனக்கல் பகுதியில் நாம் பார்க்க வேண்டிய இடங்களைக் கூறுக.
2. ஒகேனக்கல் அருவியில் நீர் விழும் காட்சி, பார்ப்பதற்கு எப்படி இருந்தது?
3. வாணி பார்த்த மிகப்பழைமையான கோவிலின் பெயர் என்ன?
4. ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி எங்கே அமைந்துள்ளது?
5. தேசநாதீஸ்வரர் கோயில் எந்த மன்னரால் அமைக்கப்பட்டது?

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஒகேனக்கல் .................................................. மாவட்டத்தில் உள்ளது.
2. இந்தியாவின் நயாகரா என்று அழைக்கப்படுவது ..................................................
3. ஒகேனக்கல் என்பதற்கு .................................................. என்பது பொருள்.
4. சுற்றுலாப் பயணிகளை நீர்வீழ்ச்சிக்கு அருகில் அழைத்துச் செல்ல .................................................. பயன்படுகிறது.

## அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. எழில் - ..................................................
2. களிப்பு - ..................................................
3. நீராடலாம் - ..................................................
4. பரவசம் - ..................................................
5. பேரிரைச்சல் - ..................................................

## பொருத்தமான சொல்லால் நிரப்புக.

1. கடற்கரையில்.................................. (மணல் / மனல்) வீடு கட்டி விளையாடலாம்.
2. மரத்தில் பழங்கள் .................................. (குரைவாக / குறைவாக ) உள்ளன.
3. வலப்பக்கச் சுவற்றின் மேல் .................................. (பல்லி / பள்ளி) இருக்கிறது.
4. ஆதிரைக்கு நல்ல..................................(வேலை / வேளை) கிடைத்துள்ளது.

## படங்களை இணைத்துச் சொற்களைக் கண்டுபிடிப்போமா?




சூரியன் + காந்தி = சூரியகாந்தி




__________ + __________ = __________




__________ + __________ = __________




__________ + __________ = __________

### தெரிந்து கொள்வோம்

தமிழ்நாட்டில் கோடை வாழிடமாகவும், சுற்றுலாத்தலமாகவும் விளங்கும் உதகமண்டலம் (ஊட்டி) "மலைகளின் அரசி" என அழைக்கப்படுகிறது. இது, நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ளது.

## சிந்திக்கலாமா?

கீழ்க்காணும் படங்களை உற்றுநோக்கித் தூய்மையான காற்று எங்கே கிடைக்கிறது? உன் கருத்துகளை வெளிப்படுத்துக.





### பாடலிலிருந்து உணவுப் பொருள்களின் பெயர்களை எழுதுக.

இட்டலி தோசை வேணுமா.
இங்கே வந்து பாரம்மா.
பிட்டு கூட இருக்குது
தட்டில் நீயும் எடுத்திடு
கோதுமை, ரவை உப்புமா.
சர்க்கரை தொட்டு தின்னும்மா.
கம்மஞ்சோறும், மோரும் போல்
பார்த்ததுண்டா ஊரினில்
கேப்பைக் களியைப் போலவே
வேறு உணவு உண்டோ உலகினில்
கடலைமிட்டாய், எள்ளு மிட்டாய்
கடித்து கடித்துத் தின்னலாம்.
பணியாரம், பாயாசம்,
பதமாய் எடுத்து உண்ணலாம்.
உணவையே மருந்தாக தினமும்
நாமும் உண்பதால்
நோய்கள் நம்மை அண்டுமா!
கண்ணே! நீயும் சொல்லம்மா!.

இட்டலி, ..............................

.............................., ..............................

.............................., ..............................

.............................., ..............................

.............................., ..............................

.............................., ..............................

## இன எழுத்துகள்

தமிழ் உயிர் எழுத்துகள் ஒன்றோடு ஒன்று இணைந்து வரும். எழுத்துகள் பிறக்கும் இடம், ஒலியமைப்பு, ஒலியளவு, பொருள் இவற்றைக்கொண்டு இன எழுத்துகளாக கருதப்படுகிறது. உயிர் எழுத்துகளை இனமாக அடையாளம் கண்டு கொள்வதால் அவற்றை வரிசைப்படுத்தி எழுத வசதியாகிறது.

உயிரெழுத்துகள் பன்னிரண்டு. அவற்றை உயிர்க்குறில், உயிர்நெடில் எனப் பிரித்துப் படிக்கிறோம். ஆகையால், உயிர்க்குறில் எழுத்துகளுக்கு உயிர்நெடில் எழுத்துகள் இனமாக வரும்.

அ - ஆ | இ - ஈ | உ - ஊ | எ - ஏ | ஐ - ? | ஒ - ஓ | ஔ - ?

என்ன இது? 'ஐ' என்ற எழுத்துக்கும் 'ஔ' என்ற எழுத்துக்கும் இன எழுத்துகள் எங்கே? கண்டு பிடிப்போம். 'ஐ' - இந்த எழுத்தை நன்றாக ஒலித்துப் பார்த்தால் இறுதியில் 'இ' என்ற ஓசையில் முடிகிறது. இதே போல், 'ஔ' என்னும் எழுத்தை ஒலித்துப்பார்த்தால் அது 'உ' என்ற ஓசையில் முடிவதைக் காணலாம். ஐ, இ, ஔ, உ ஒலியாலும், இடத்தாலும் ஒரே இனமாகக் கருதப்படும்.

ஐ - இ | ஔ - உ

### மெய்யெழுத்துகள்

மெய்யெழுத்துகள் பதினெட்டு. அவற்றை வல்லினம், மெல்லினம், இடையினம் எனப் பெயரிட்டு பிரித்துப் படிக்கிறோம்.

தமிழ் இலக்கண நூல்களின்படி ஒவ்வொரு வல்லின எழுத்துக்கும் ஒரு மெல்லின எழுத்து இன எழுத்தாக அமைகின்றது. கீழே இருப்பதைப் பாருங்கள்.

க் - ங் | ச் - ஞ் | ட் - ண் | த் - ந் | ப் - ம் | ற் - ன்

ய், ர், ல், வ், ழ், ள் இந்த ஆறு எழுத்துகளும் இடையினம். இவற்றிற்கு இன எழுத்துகள் இல்லை. ஓர் எழுத்திற்கு அருகில் அதே எழுத்து வந்தாலும் அவை இன எழுத்துகள் அல்ல.

( எ.கா. பக்கம், அச்சம் )

இன எழுத்துகள் சேர்ந்தே வருவதைக் காணலாம் கீழே உள்ள படங்களைப் பார்த்து, அவற்றின் பெயர்களைச் சொல்லி, எழுதிப் பார்க்கவும்.


சங்கு


மஞ்சள்


பந்து


வண்டு


பம்பரம்


கன்று

**உங்கள் நண்பர்களின் பெயர்களிலுள்ள இன எழுத்துகளைக் கண்டுபிடியுங்கள்.**

நந்தினி, வந்தனா, அம்பிகா, மங்கை, கங்கா, அஞ்சனா, மஞ்சுளா, காஞ்சனா, காந்தி, தண்டபாணி, பாண்டியன், இளமாறன், மணிமாறன், இராமலிங்கம், கந்தன், நந்தா, சித்தார்த்தன், காந்தவாசன், கண்மணி.

**விடுபட்ட இடங்களில் சரியான இனஎழுத்துகளால் நிரப்புக.**


செ ... ... ருத்தி


செ .......... டு


வெ.......... டை


வ ..... .....


இ ..... .....


ஆ ..... .....


நு ..... .....


தூ ..... .....

## செயல் திட்டம்

உங்கள் வீட்டிலுள்ள பொருள்களுள் இன எழுத்துகள் இடம் பெற்ற சொற்கள் பதினைந்தை ( 15 ) எழுதி வருக.

# 7 நாயும், ஓநாயும்

ஒரு நாள் ஓநாய் ஒன்று காட்டில் அங்கும் இங்குமாக அலைந்து திரிந்தது. அதற்கு சரியான பசி. காடு முழுவதும் தேடியும் சாப்பிட ஒன்றும் கிடைக்கவில்லை. அப்போது ஒரு நாய் அவ்வழியாக வருவதைக் கண்டது. அந்த நாயோ! கொழுத்துப் பெருத்து இருந்தது. அது மிகவும் மகிழ்ச்சியுடன் இருப்பதைக் கண்டது. அந்த நாயை அடித்துத் தின்று விடலாமா! என்று ஓநாய் நினைத்தது. ஆனால் அப்போது இருந்த சோர்வான நிலையில் அந்த கொழுத்துப் பெருத்த நாயுடன் சண்டையிட்டு வெற்றி பெற முடியுமா? என்று அச்சம் கொண்டது. அதனால் அதனுடன் நட்பாய்ப் பேச முடிவு செய்தது.

ஓநாய் : ஓ! நண்பா, நீ கொழுகொழு என்று எத்தனை அழகாய் இருக்கிறாய்! உன்னைப் பார்க்க மகிழ்ச்சியாக உள்ளது.

நாய் : மிக்க நன்றி நண்பனே! நான் சொல்கிறபடி செய்தால் நீயும் என்னைப் போல் கொழு கொழு என்று ஆனந்தமாய் இருக்கலாம். இந்தக்காட்டில் ஏன் உணவுக்காக இப்படி அலைந்து திரிந்து பசியும், பட்டினியுமாக துன்பப் படுகிறாய்? என்னுடன் வந்துவிடு. சுவையான நல்ல உணவு கிடைக்கும். வேளாவேளைக்கு உண்டு சுகமாக இருக்கலாம்.



| | | |
|---|---|---|
| ஓநாய் | : | அப்படியானால் அங்கு நான் என்ன வேலை செய்ய வேண்டும்? |
| நாய் | : | வேலை அப்படி ஒன்றும் பெரிதாக இல்லை. அறிமுக மில்லாதவர்கள் வீட்டிற்கு வந்தால் விரட்டியடிக்க வேண்டும். எஜமானர்களைப் பார்த்தால் வாலை ஆட்ட வேண்டும். அவ்வளவுதான். அதற்காக நமக்கு வித விதமான உணவுப் பண்டங்களைத் தருவார்கள். அன்பாக நமது தலையை வருடிக் கொடுப்பார்கள். அதில்தான் எத்தனை சுகம். |
| ஓநாய் | : | ஓ! அப்படியா! அவ்வளவு சுகமான வாழ்க்கையா! தயவுசெய்து என்னையும் அழைத்துச்செல் நண்பா. |
| நாய் | : | வா நண்பா! என்னுடன் அழைத்துச் செல்கிறேன். நாம் இருவரும் மகிழ்ச்சியாக இருப்போம். |
| ஓநாய் | : | இதோ இப்போதே புறப்படுகிறேன். அது சரி, உன் கழுத்தில் என்ன கருப்புப்பட்டை தொங்குகிறது? |
| நாய் | : | அது ஒன்றுமில்லை. நீ வா! போகலாம். |
| ஓநாய் | : | ஒன்றுமில்லை என்றால் கழுத்தில் எப்படி பட்டை வந்தது? |
| நாய் | : | "அது வேறொன்றுமில்லை, என்னைச் சங்கிலியால் கட்டிப் போடுவதற்கு வசதியாக போடப்பட்ட பட்டை" அவ்வளவு தான். |
| ஓநாய் | : | என்ன, கட்டிப்போடுவார்களா! அப்படியானால், உன் விருப்பப்படி எப்பொழுது வேண்டுமானாலும் வெளியே செல்ல முடியாதா? |
| நாய் | : | ஆமாம், நம் விருப்பம் போல எப்பொழுது வேண்டு மானாலும் வெளியே செல்ல முடியாது. அதனால் என்ன? |
| ஓநாய் | : | "அதனால் என்னவா"! அதுதான் எனக்குப் பெரிய காரியம். எப்படிப்பட்ட ராஜ வாழ்க்கையாக இருந்தாலும் சரி, என் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்க மாட்டேன். சங்கிலியால் கட்டப்பட்டு விதவிதமான உணவுகளை உண்பதைவிடச் சுதந்திரமாகக் காட்டில் அலைந்துதிரிந்து, கிடைப்பதை உண்பதே ஆனந்தம். நன்றி நண்பனே! நான் போகிறேன். |

திறன் : முற்றுப்புள்ளி, வினாக்குறி ஆகிய நிறுத்தற்குறியீடுகளை அறிந்து படித்தல்.

## உரையாடலாம் வாங்க!

ஓநாயும், நாயும் கதையை உம் சொந்த நடையில் கூறுக. முகமூடி அணிந்து நடித்துக் காட்டுக.

## சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. "சோர்வு" இச்சொல் உணர்த்தும் பொருள் ______________

   (அ) களைப்பு (ஆ) துன்பம் (இ) வருத்தம் (ஈ) அன்பு

2. "ஒன்றுமில்லை" - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________

   (அ) ஒன்று + இல்லை (ஆ) ஒன்றும் + இல்லை
   (இ) ஒன்றுமே + இல்லை (ஈ) ஒன்று + மில்லை

3. "அறிமுகம் + இல்லாதவர்கள்" - இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ______________

   (அ) அறிமுகம்மில்லாதவர்கள் (ஆ) அறிமுகமில்லாதவர்கள்
   (இ) அறிமுகம்இல்லாதவர்கள் (ஈ) அறிமுகஇல்லாதவர்கள்

4. "விருப்பு" என்ற சொல்லின் எதிர்ச்சொல் ______________

   (அ) வெறுப்பு (ஆ) கருப்பு
   (இ) சிரிப்பு (ஈ) நடிப்பு

## வினாக்களுக்கு விடையளி.

1. பசியால் மெலிந்த ஓநாய் எங்கு சுற்றித் திரிந்தது?
2. நாய், ஓநாயை எங்கு வரச்சொன்னது?
3. நாயின் கழுத்தில் என்ன இருந்தது?

## அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. விதவிதமான - ______________
2. சுதந்திரம் - ______________
3. வருடுதல் - ______________
4. பிரமாதம் - ______________
5. சந்தேகம் - ______________

## சரியான தொடரை ✓ எனவும் தவறான தொடரை ✗ எனவும் குறியிடுக.

1. ஓநாய் தின்பதற்கு எதுவும் கிடைக்காமல் மெலிந்திருந்தது. ☐
2. நாய் புதியவர்களைக் கண்டால் விரட்டியடிக்காது. ☐
3. ஓநாயின் கழுத்தில் கருப்புப் பட்டை இருந்தது. ☐
4. ஓநாய் சுதந்திரமாக வாழ ஆசைப்படவில்லை. ☐
5. ஓநாயை நாய் வீட்டிற்கு அழைத்தது. ☐

## சரியான சொல்லால் நிரப்புக.

1. நீ எவ்வளவு .............................................. இருக்கிறாய்?
2. நாயின் கழுத்தில் .............................................................. இருந்தது.
3. வீட்டுக்காரர்கள் நாயை ............................................................ வருடிக்கொடுப்பார்கள்.
4. வீட்டில் மாட்டிக் கொள்வதை விட ...................... காட்டில் அலைவதே மேல்.
5. என்னைத் தயவுசெய்து அழைத்துச் செல் என்று .............................. கூறியது.




## சொல்லக்கேட்டு எழுதுவோம்.

1. நல்ல உணவு கிடைக்கும்.
2. கழுத்தில் பட்டை எப்படி வந்தது?
3. நாய் மகிழ்ச்சியாய் ஓடிவந்தது.
4. ஆகா! என்ன சுகம் தெரியுமா!

## சொற்களை இணைத்து எழுதுவோம்







1. ................................................ 1. ................................................

2. ................................................ 2. ................................................

3. ................................................ 3. ................................................

### தெரிந்து கொள்வோம்

நாம் பொருள் உணர்ந்து படிப்பதற்கு
நிறுத்தக்குறிகள் உதவுகின்றன.

? - வினாக்குறி

, - காற்புள்ளி

; - அரைப்புள்ளி

: - முக்காற்புள்ளி

. - முற்றுப்புள்ளி

! - வியப்புக்குறி

## சொல் விளையாட்டு




ண், க, டி, ம், த, ள், வு, ன



சி, றி, வி, க், ள, கு, ண், மீ, டை, ன்



சி, ம், ன, க, ங், வ, பு, ப், றை, ல, ல்



கு, பை, ப், டி, ட், ம், ப, ள

## சொற்களை முறைப்படுத்திச் சரியான தொடரை உருவாக்குக.

எ.கா. சுதந்திரத்தை கொடுக்க என் மாட்டேன் விட்டு

என் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்க மாட்டேன்.

1. கொழு, கொழு அழகையும் புகழ்ந்தது நாயின் உடம்பையும்.

------------------------------------------------------------

2. பார்த்தால் வீட்டுக்காரர்களைப் ஆட்ட வாலை வேண்டும்.

------------------------------------------------------------

## பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.

எ.கா. நான் என்ன வேலை செய்ய வேண்டும்

நான் என்ன வேலை செய்ய வேண்டும்?

1. ஆகா என்ன சுகம் தெரியுமா
2. ஒன்றுமில்லை என்றால் கழுத்தில் எப்படி பட்டை ஏற்பட்டது
3. என்ன கட்டிப் போடுகிறார்களா
4. நம் விருப்பம் போல போக முடியாது அது என்ன பிரமாதம்
5. நல்ல உணவு உனக்கும் கிடைக்கும் என்று சொன்னது

## விளையாடலாம், வாங்க!

### சொன்னால் செய்வேன்!

குழந்தைகளை வட்டமாக ஓடவிட வேண்டும். ஆசிரியர் நடுவில் நிற்க வேண்டும். ஆசிரியர் ஒரு பாடலைப் பாடவேண்டும். ஆசிரியர் பாடுவதை நிறுத்தியவுடன் எல்லாக்குழந்தைகளும் அப்படியே நிற்க வேண்டும். உடனே ஆசிரியர் ஒரு விலங்கின் பெயரைச் சொல்ல, அந்த விலங்கு போல ஒலி எழுப்ப வேண்டும். எ.கா. பசு.... என ம்மா, ம்மா என ஒலி எழுப்புதல், இவ்வாறு வேறு வேறு விலங்குகள் பெயர் சொல்லலாம். இவ்விளையாட்டில் அனைத்துக் குழந்தைகளையும் பங்கேற்கச் செய்தல் வேண்டும்.

## சூழலுக்கேற்ற உணர்வைத் தெரிவு செய்க.

( சிரிப்பு, மகிழ்ச்சி, வருத்தம், வியப்பு, அச்சம் )

1. அப்பா இனிப்பு வாங்கி தரும்போது ஏற்படும் உணர்வு.
2. மிகப்பெரிய மலையைப் பார்க்கும்போது வரும் உணர்வு.
3. கோமாளி செய்யும் செயல்களைக் காணும்போது.
4. நம்முடைய தோழிக்கு அடிபட்டால் வரும் உணர்வு.
5. பெரிய பாம்பை எதிரில் கண்டால் வரும் உணர்வு.

**சிந்திக்கலாமா?**

கீழ்க்கண்ட கிளிகளுள் எந்தக் கிளி மகிழ்ச்சியாக இருக்கும்? ஏன்?





**செயல் திட்டம்**

பல்வேறு விலங்குகள், பறவைகள் படங்களைத் திரட்டுக. அவற்றைத் தொகுப்பேட்டில் ஒட்டி, அவை எழுப்பும் ஒலிகளின் பெயர்களை எழுதி வருக.

# 8 நட்பே உயர்வு
## ( புதிர்க்கதை )



ஓர் அடர்ந்த காடு. அந்தக் காட்டின் நடுவே அகன்ற ஆறு ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றின் கரையில் நாவல்மரத்தில் நிறைய பழங்கள் பழுத்திருந்தன. அந்த நாவல் பழங்களைத் தின்று குரங்கு ஒன்று உயிர் வாழ்ந்து வந்தது. ஆற்றோரத்தில் பசுமையான புற்கள் விளைந்திருந்தன. அங்கு முயல், மான் போன்றவைகளும் புல்லைத் தின்று மகிழ்ச்சியுடன் ஆடித்திரிந்தன. முயலும், குரங்கும் நீண்ட நாள் நண்பர்கள். முயல் வேண்டிய பொழுதெல்லாம் குரங்கு நாவல் பழங்களைப் பறித்துப் போடும். ஆவலுடன் அவற்றை முயல் தின்று பசியாறும்.

அந்தப் பெரிய ஆற்றில் எப்பொழுதுமே நீர் பெருக்கெடுத்து ஓடும். ஆற்றின் அக்கரையிலுள்ள பெரிய காடும் மிகவும் செழிப்பானது. அங்கு போய்ப் பார்க்க வேண்டும் என்று குரங்கிற்கு நீண்டநாள் ஆசை. ஆனால் ஆற்றைக் கடந்து போகப் பயமாக இருந்தது. ஒரு நாள் புதிதாக முதலை ஒன்று ஆற்றில் அவ்வழியே வந்தது. நாவல் மரத்தில் நாவல்பழம் தின்று கொண்டிருந்த குரங்கைப் பார்த்தது. "நாவல்பழம் மிகவும் சுவையாக உள்ளதா?" என்று கேட்டது. குரங்கும் ..... "முதலையாரே! உமக்கும் சில நாவல்பழம் பறித்துத் தருகிறேன். சாப்பிட்டுப் பாருங்கள்" என்றது.

நாவல் பழங்கள் சிலவற்றைப் பறித்து ஆற்றில் வாயைப் பிளந்து காத்துக் கொண்டிருந்த முதலையிடம் போட்டது. முதலையும் “இன்னும் கொஞ்சம் போடு, இன்னும் கொஞ்சம் போடு” என்று சுவைத்து சுவைத்துத் தின்றது. கரையில் மேய்ந்து கொண்டிருந்த முயலோ! அதைப் பார்த்துக் கைதட்டிச் சிரித்துக் கொண்டிருந்தது. முதலையுடன் கவனமாகப் பழகு என்று குரங்கை எச்சரித்தது.

நாவல் பழங்களைச் சுவைத்த முதலைக்கு, பழமே இவ்வளவு சுவையாக இருக்கிறதே! இப்பழங்களைத் தின்று வாழும் குரங்கின் ஈரல் எவ்வளவு சுவையாக இருக்கும். எப்படியாவது குரங்குடன் நண்பனாகப் பழகி அதன் ஈரலைத் தின்ன திட்டம் போட்டது.

“குரங்காரே! எனக்கு நிறைய பழங்கள் கொடுத்து என் பசியைப் போக்கினீர்கள்”. மிக்க நன்றி. இந்த ஆற்றின் மறுகரையில் பெரிய காடு இருக்கிறது. அதில் இதை விடப் பெரிதாக நாவல் மரங்கள் வளர்ந்திருக்கின்றன. அதில் பழங்கள் கொத்துக் கொத்தாய் பழுத்துத் தொங்குகின்றன. நாம் அங்கு சென்றால் அப்பழங்களை நீயும் உண்டு எனக்கும் தரலாமல்லவா? என்றது. அதற்கு குரங்கு, “எனக்கும் அக்காட்டைப் பார்க்க வேண்டுமென்று பலநாள்களாக ஆசை. ஆனால், எனக்கு இந்த ஆற்றைக் கடந்து போகத் தான் பயமாக இருக்கிறது” என்றது.



அதைக் கேட்ட முதலை, “நான் இருக்கும் போது என்ன பயம்? என் முதுகில் ஏறிக்கொள். நான் உன்னை அக்கரைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்” என்றது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த குரங்கின் நண்பன் முயல் “வேண்டாம்! முதலையை நம்பி தனியாக அதனுடன் செல்ல வேண்டாம் என்று எச்சரித்தது. அப்படியானால் நீயும் எங்களுடன் வா! நாம் மூவரும் அக்கரைக்குச் செல்வோம்” என்றது முதலை. நண்பர்கள் இரண்டு பேரின் ஈரலையும் சாப்பிட முதலைக்கு ஆசை பிறந்தது. தன் நெருங்கிய நண்பனைப் பிரிய மனமில்லாமல் முயலும், குரங்குடன் சென்றது. இரண்டும் முதலையின் முதுகின் மீது தாவி ஏறி உட்கார்ந்து கொண்டன. முதலை மறுகரையை நோக்கி, ஆற்றில் மிதந்து சென்றது. பாதி ஆற்றைக் கடந்தது. “உங்கள் இருவரின் ஈரலையும் எனக்கு தின்ன ஆசையாக உள்ளது” என்று முயலிடம் சொன்னது. என்ன இப்படிச் செய்துவிட்டாய்? எங்களை மீண்டும் கரையில் விட்டு விடு! என்று கெஞ்சியது முயல். என் நண்பன் குரங்கை ஒன்றும் செய்து விடாதே! என்றும் கதறியது.

அப்படியானால் என் மூன்று புதிர்களுக்கான விடைகளைக் கூறு. உன் விடைகள் சரியாக இருந்தால் உங்களை அக்கரையில் விட்டு விடுகிறேன் என்றது முதலை. சரி! புதிர்களைச் சொல் என்று கேட்டது முயல்.

முதலை புதிர்களைச் சொல்லத் தொடங்கியது.

புதிர்

1. கீழே வரும்; ஆனால் மேலே போகாது.

அது என்ன?

2. கைகள் இருக்கும்; ஆனால் கை தட்ட முடியாது.

அது என்ன?

3. ஆரம்பத்தில் உயரம்; எரிந்து முடிந்தவுடன் குட்டை.

அது என்ன?

முயல் முதலையிடம் இவ்வளவு தானே! உன் புதிர்களுக்கான விடையைக் கேள்.

முதல் புதிருக்கு ‘மழை’, இரண்டாவது புதிருக்கு ‘கடிகாரம்’, மூன்றாவது புதிருக்கு ‘மெழுகுவத்தி’ என்பதே விடையாகும். நீ கேட்டபடியே புதிருக்கு விடை சொல்லிவிட்டேன். என்னையும், என் நண்பனையும் கரையில் இறக்கிவிடு என்றது.

வேறு வழியில்லாமல் முதலை முயலையும், குரங்கையும் அது ஏற்றி வந்த இடத்திற்கே நீந்திச் சென்று கரையை அடைந்தது. கரையில் தாவி இறங்கிய நண்பர்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் அவரவர் இருப்பிடம் சென்றனர்.

**நீதிக்கருத்து : கூடாநட்பு கேடாய் முடியும்**



**உரையாடலாம் வாங்க!**

உனக்குத் தெரிந்த புதிர் / விடுகதைகளை வகுப்பறையில் கலந்துரையாடுக.

அன்பை மறவா முயல் கதையை உமது சொந்த நடையில் கூறுக.

## சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. "அகன்ற" என்ற சொல்லின் பொருள் ..........

   (அ) நீளமான  (ஆ) பரந்த  (இ) சிறிய  (ஈ) குறுகிய

2. "பெருக்கெடுத்து" இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........

   (அ) பெருக்கு + எடுத்து  (ஆ) பெரு + எடுத்து

   (இ) பெருக் + எடுத்து  (ஈ) பெருக்கு + அடுத்து

3. "மறு + கரை" - இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது..........

   (அ) மறுக்கரை  (ஆ) மறுகரை

   (இ) மறுஅக்கரை  (ஈ) மறுக்காரை

4. "நண்பன்" என்ற சொல்லின் எதிர்ச்சொல் ..........

   (அ) சிறுவன்  (ஆ) தோழன்

   (இ) மகன்  (ஈ) பகைவன்

5. "சூழ்ச்சி" என்ற சொல்லுக்குக் கதையின்படி தொடர்புடைய விலங்கு..........

   (அ) குரங்கு  (ஆ) முதலை

   (இ) முயல்  (ஈ) சிங்கம்

## வினாக்களுக்கு விடையளி.

1. முயல், மான் ஆகியவற்றின் உணவாக கூறப்பட்டுள்ளது எது?
2. குரங்கு எதனைச் சாப்பிட்டு உயிர் வாழ்ந்தது?
3. நாவல்பழம் மிகவும் சுவையாக உள்ளதா என்று யார் யாரிடம் கேட்டது?
4. முதலையின் திட்டம் யாது?
5. நீ முதலையிடம் மாட்டியிருந்தால் எவ்வாறு தப்பித்திருப்பாய்? கலந்துரையாடுக.
6. உன் நண்பன் உனக்குச் செய்த உதவிகள் ஏதேனும் இரண்டு கூறுக.

## புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக.



1. கொதிக்கும் எண்ணெயில் குதித்து
குண்டாகி வெளியே வருவாள் - அவள் யார்?



2. மாமா போட்ட பந்தல் மறுபடி
பிரிச்சா கந்தல் - அது என்ன?



3. எட்டுக்கால் ஊன்றி, இருகால் படமெடுக்க,
வட்டக்குடை பிடிக்க, வாராராம் வன்னியப்பு.
- அது என்ன?



4. குண்டன் குழியில் விழுவான்,
குச்சியப்பன் தூக்கி விடுவான். - அவன் யார்?



5. தலையைச் சீவினால் தாளில் நடப்பான்.
- அவன் யார்?



6. தட்டு தங்க தட்டு; தகதகக்கும் வெள்ளித்தட்டு
தலைக்குமேல் உலாவரும் - அது என்ன?

## முறை மாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுக.

1. ஆறு ஓடிக் அகன்ற கொண்டிருந்தது

.......................................................................

2. இருந்தது கடந்து பயமாக ஆற்றைக் போக

.......................................................................

3. என் ஒன்றும் செய்து குரங்கை நண்பன் விடாதே

.......................................................................

4. பயம் என்ன நான் போது இருக்கும்

.......................................................................

5. நட்பு கூடா முடியும் கேடாய்

.......................................................................



## தமிழோடு விளையாடு

மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்க வேண்டும். ஒரு குழுவிலிருந்து மாணவர்கள் இருவரை அழைத்து அதில் ஒருவரின் காதில் அவருக்கு மட்டும் கேட்கும்படியாக மெதுவாக ஒரு சொற்றொடரைக் கூறுக. இப்பொழுது அந்த மாணவர், சொல்லப்பட்ட சொற்றொடருக்கு ஏற்றாற்போல் எதிரே உள்ள மற்றொரு மாணவரிடம் நடித்துக் காட்ட வேண்டும். அதனை, அந்த மாணவன் கண்டுபிடிக்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து விளையாடி மகிழச் செய்க.

### நெடிலைக் குறில் ஆக்குக

| | | | |
|---|---|---|---|
| 1. கூடம் | - ---------------------------------------- | 5. மூட்டு | - ---------------------------------------- |
| 2. தூக்கம் | - ---------------------------------------- | 6. தானம் | - ---------------------------------------- |
| 3. கூறை | - ---------------------------------------- | 7. பூட்டு | - ---------------------------------------- |
| 4. வேட்டு | - ---------------------------------------- | 8. தாடி | - ---------------------------------------- |

### மீண்டும் மீண்டும் சொல்லிப்பழகுவோம்

1. விண்ணுக்கும் மண்ணுக்கும் பெண்ணுக்கும் கண்ணுக்கும் டண்ணனகரம்.
2. உளி கொண்டு சிலையொன்று வடித்தான்.

   உலகின் தலைசிறந்த கலையென்று மலைத்தான்.
3. குட்டை மரமும் நெட்டைமரமும் மொட்டைத்தலையை தடவிக்கொண்டன.

## ஒரு சொல் பல பொருள் அறிக.






## கலையும் கைவண்ணமும்

### விரல் பூக்கள் செய்வோமா

உங்களுக்குப் பிடித்த வண்ணத்தை ஆள்காட்டி விரலால் தொட்டு வையுங்கள். ஒரே ஒரு கோடு நடுவில் போடுங்கள். பூச்செடி தயார்.




உன் வீட்டில் உள்ள பாட்டியிடம் கேட்டு பத்து விடுகதைகளை எழுதி வா.

**சரியான எழுத்தை இணைத்து சொல் உருவாக்குக.**

1.

| | | | | |
|---|---|---|---|---|
| க | ட | ற் | க | றை / ரை |

= ................................................................................

2.

| | | | |
|---|---|---|---|
| கு | ழ / ள | ந் | தை |

= ................................................................................

3.

| | | | | |
|---|---|---|---|---|
| நூ | ல் / ள் | க | ண் / ன் | டு |

= ................................................................................

4.

| | | | |
|---|---|---|---|
| இ | ள | ணீ / நீ | ர் |

= ................................................................................

5.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வா | லை / ழை | ப் | ப | ழ | ம் |

= ................................................................................

6.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கொ | ன் / ண் | டை | ச் | சே | வ | ல் |

= ................................................................................

7.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வ | ண் / ன் | ண | த் | து | ப் | பூ | ச் | சி |

= ................................................................................

8.

| | | | | |
|---|---|---|---|---|
| ப | ற / ர | வை | க | ள் |

= ................................................................................

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | ம | கி | ல் / ழ் | ச் | சி |

= ....................................................................................................

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10. | ப | ல் / ள் | ளி | க் | கூ | ட | ம் |

= ....................................................................................................

**கதையைத் தொடர்ந்து எழுதி பொருத்தமான தலைப்பைத் தருக.**



....................................................................................

ஒரு காட்டின் நடுவில் ஆறு ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. அந்த ஆற்றின் ஒரு கரையில் இருந்து மறுகரைக்குச் செல்ல ஒரு பாலம் இருந்தது. அது ஒருவர் மட்டுமே செல்லக்கூடிய அளவிற்கு மிகவும் குறுகியதாக இருந்தது.

ஒரு நாள் இரண்டு ஆடுகள் ....................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

## உரையாடலை நிறைவு செய்க

மதன் : என்ன சுதன் கோடை விடுமுறைக்கு நீ எங்கு சென்றாய்?

சுதன் : நான் என் பாட்டி வீட்டிற்குச் சென்றேன்.

மதன் : ------------------------------------------------

சுதன் : என் பாட்டி வீடு மதுரையில் உள்ளது.

மதன் : ------------------------------------------------

சுதன் : இல்லை. என் குடும்பத்தினருடன் தான் சென்றேன்.

நீ எங்குச் சென்றாய்?

மதன் : ------------------------------------------------

## வினா அமைத்துப் பழகுவோமா?

## கோடிட்ட சொல் பதிலாக வரும்படி வினா தொடுக்கலாமா?

( எ.கா. )

1. என் பெயர் பூங்குழலி.

   உன் பெயர் என்ன?

2. மணி கடற்கரைக்குச் சென்றான்.

   ------------------------------------------------ ?

3. அப்பா புத்தாடை வாங்கித் தந்தார்.

   ------------------------------------------------ ?

4. குதிரை விரைவாக ஓடியது.

   ------------------------------------------------ ?

5. பசு பால் தரும்.

   ------------------------------------------------ ?

## அகர முதலி

| | | | |
|---|---|---|---|
| 1. | அடாத செயல் | - | தகாத செயல் |
| 2. | அதிகம் | - | மிகுதி |
| 3. | அமர்ந்த | - | உட்கார்ந்த |
| 4. | ஆணவம் | - | செருக்கு |
| 5. | ஆபரணங்கள் | - | அணிகலன்கள் |
| 6. | ஆலோசனை | - | கருத்து |
| 7. | ஆனந்தம் | - | மகிழ்ச்சி |
| 8. | இலாபம் | - | வருமானம் |
| 9. | என்பு | - | எலும்பு |
| 10. | எழில் | - | அழகு |
| 11. | ஏய்த்தல் | - | ஏமாற்றுதல் |
| 12. | களிப்பு | - | மகிழ்ச்சி |
| 13. | சத்தம் | - | ஒலி |
| 14. | ஐயம் | - | சந்தேகம் |
| 15. | சாத்திரங்கள் | - | மறை, சமய இதிகாச நூல்கள் |
| 16. | புலமை | - | செய்யுள் இயற்றும் ஆற்றல் |
| 17. | இலக்கணம் | - | ஒரு மொழியின் பயன்பாட்டு விதிகள் |
| 18. | சுகம் | - | நலம் |
| 19. | சுதந்திரம் | - | விடுதலை |
| 20. | செல்வந்தன் | - | பணக்காரன் |
| 21. | செல்வாக்கு | - | சொல்லுக்கு மதிப்பு |
| 22. | ஞாலம் | - | உலகம் |
| 23. | தண்டோரா | - | முரசறைந்து செய்தி தெரிவித்தல் |
| 24. | தந்திரம் | - | சூழ்ச்சி |
| 25. | தபால் | - | அஞ்சல் |
| 26. | நிபந்தனை | - | கட்டளை |
| 27. | நீராடலாம் | - | குளிக்கலாம் |
| 28. | நெறிப்படுத்துதல் | - | வழிகாட்டுதல் |
| 29. | பரவசம் | - | மகிழ்ச்சி |
| 30. | பிரமாதம் | - | பெருஞ்சிறப்பு |
| 31. | புத்திசாலி | - | அறிவாளி |
| 32. | வருடுதல் | - | தடவுதல் |
| 33. | விதவிதமான | - | வகை வகையான |
| 34. | வியாபாரி | - | வணிகர் |
| 35. | விவசாயி | - | உழவர் |
| 36. | விவாதம் | - | தருக்கம் |

# கற்றல் விளைவுகள்

| 1. கேட்டல் | 2. பேசுதல் | 3. படித்தல் | 4. எழுதுதல் | 5. நடைமுறை இலக்கணம் |
|---|---|---|---|---|
| கேட்டறியாத, எளிய சொற்களமைந்த பாடல்களையும், கதைகளையும் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்து கொள்வர்.<br><br>அவற்றின் மீதான கருத்தினை / நோக்கினை வெளிப்படுத்துவர்.<br><br>தம்மைச்சுற்றி நடைபெறும் உரையாடல் களையும் விவரிப்புகளையும் கேட்டுப் புரிந்து கொள்வர்.<br><br>வாய்மொழியிலான வருணனைகள், புதிர்கள், சொல் விளையாட்டு விதிமுறைகள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்வர். | பண்புடன் உரையாடுவர்.<br><br>பாடல்களை இசையுடன் உரிய உணர்ச்சியுடன் பாடுவர்.<br><br>தமக்கு அறிமுகமான, செய்திகளையும் விவரங்களையும் சரியான ஒலிப்புடனும், தங்கு தடையின்றியும் விவரித்துக் கூறுவர்.<br><br>கேட்கும்/ படிக்கும் கதை, கவிதை/ செய்திகள் ஆகியவற்றைப் புரிந்து கொண்டு தங்கள் கருத்துகளால் வளப்படுத்துவர். | தெளிவான ஒலிப்புடன் குறில் - நெடில், மயங்கொலிப் பிழைகளின்றிப் படிப்பர்.<br><br>முற்றுப்புள்ளி, வினாக்குறி ஆகிய நிறுத்தக் குறியீடுகளை அறிந்து படிப்பர்.<br><br>எளிய தொடர்களைத் தங்குதடையின்றிப் படிப்பர்.<br><br>படிக்கும் பகுதியில் இடம்பெறும் புதிய சொற்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொண்டு பிறகு, அவற்றின் சரியான பொருளை அறிந்து கொள்ள முயல்வர். | புதிர்கள், துணுக்குகளுக்கு விடை எழுதுவர்.<br><br>செய்தி / கதைப்பகுதி / கதை / இதழ் ஆகியவற்றைப் படித்துப் பொருள் உணர்ந்து கருத்து தெரிவிப்பர். கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுவர்.<br><br>அறிந்த சொற்களைக் கொண்டு, தமக்கான நடையில் நிறுத்தக் குறியீடுகள், எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறுசிறு தொடர்கள் எழுதுவர். | இன எழுத்துகளை அறிந்துகொள்வர்.<br><br>ஒருமை, பன்மை வேறுபாடு அறிவர் ( அது - அவை ) |

| 6. கற்கக் கற்றல் | 7. சொல்லாட்சித் திறன் | 8. படைப்புத் திறன் | 9. விழுமியங்கள் | 10.வாழ்வியல் திறன் |
|---|---|---|---|---|
| சிறுவர்களுக்கான பெரிய எழுத்து படக்கதைகள்<br><br>கணினியில் குழந்தைகளுக்கான புதிர்கள், மொழி விளையாட்டுகள் விளையாடி மகிழ்வர். | கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.<br><br>உணவுப்பொருள்களின் பெயர்கள்<br>ஆடை அணிகலன்களின் பெயர்கள்<br>மரம், செடி, கொடிகளின் பெயர்கள்<br>பொது இடங்களின் பெயர்கள் (பள்ளி, வங்கி, பேருந்து நிலையம், மருத்துவமனை .....)<br><br>பழமொழிகள்<br>மரபுத்தொடர்கள் | சொல் விளையாட்டுகளில் பங்கேற்பர்<br><br>ஒரே சொல்லில் தொடங்கும் / முடியும் பல்வேறு சொற்களை உருவாக்க அறிந்து கொள்வர்.<br><br>கதையைத் தொடர்ந்து கூறி முடிப்பர் | தூய்மை பேணுதல்<br><br>விதிகளைப் பின்பற்றுதல்<br><br>பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்<br><br>உண்மை பேசுதல்<br><br>நட்புணர்வு | தன்னை அறியும் திறன்<br><br>சிக்கல் தீர்க்கும் திறன்<br><br>முடிவெடுக்கும் திறன்<br><br>கூர்சிந்தனைத்திறன்<br><br>பிறரை அவர் நிலையிலிருந்து பார்க்கும் திறன்<br><br>உணர்வுகளைக் கையாளும் திறன் |